பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 32 சனிக்கிழமை 16.07.2022 கதிர் 253

**இது ரகசியம் அல்ல!**

யார், எது சொன்னாலும், எப்படி விமர்சித்தாலும், முதுபெரும் அரசியல்வாதியான சம்பந்தன் அரசியல் தந்திரசாலி. வயது போய் உடல் தளர்ந்தாலும் அவரின் அரசியல் தந்திர மூளை மங்கவே இல்லை.

நேற்று எங்கள் ☞2

# ஜனாதிபதித் தெரிவு குறித்து கூட்டமைப்பின் முடிவு 19 இல்

## எம்.பிக்கள் குழு கூடித் தீர்மானிக்குமாம்; பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



புதிய ஜனாதிபதியாக யாரைத் தெரிவு செய்வது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் முடிவு எடுக்கவில்லை. எதிர்வரும் 19ஆம் திகதி கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி இது தொடர்பில் முடிவு எடுக்கும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். ☞2

## 20இல் களமிறங்குகிறார் சஜித் கூட்டமைப்பு ஆதரவளிக்குமாம்

### அவரே நம்பிக்கையுடன் தெரிவிப்பு



நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதிக்கான தேர்வில் போட்டியிடவுள்ளேன்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞2

## முதலில் நாட்டை மீட்போம்; பிறகு அரசியல் செய்வோம்

### கட்சிகளிடம் ரணில் வேண்டுகோள்



நாம் வாழ்வதற்கும், அரசியல் செய்வதற்கும் நாடு அவசியம். எனவே, நாடு குறித்தும், மக்கள் பற்றியும் சிந்தித்துச் செயற்படுமாறு கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன். முதலில் நாட்டை மீட்போம். அதன் பிறகு அரசியல் செய்வோம்.

– இவ்வாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ☞2

## எவருக்கு ஆதரவு வழங்குவது? பிளவடையுமா மொட்டுக் கட்சி?



நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும்போது யாருக்கு ஆதரவாக வாக்களிப்பது என்பது தொடர்பாக ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

பதில் ஜனாதிபதியான ☞2




## மஹிந்த, பஸில் வெளிநாட்டுக்கு தப்பியோடும் முயற்சிக்கு ஆப்பு!

### தடை விதித்து உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு



ராஜபக்ஷ யுகம் மக்கள் தன்னெழுச்சி எதிர்ப்புப் போராட்டத்தால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் வெளி நாட்டுக்குத் தப்பியோடும் முயற்சிக்குக் கடிவாளம் போடப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாட்டுக்குத் தப்பியோடி அங்கிருந்து ஜனாதிபதிப் பதவியை இராஜினாமா செய்துள்ள ☞2

## ஜனாதிபதிப் பதவிக்கு டலஸும் போட்டியில்!

### அவரே நேற்று அறிவிப்பு



கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியமைத் தொடர்ந்து வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதிப் பதவிக்குத் தான் போட்டியிடுவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ☞2

## அரசமைப்புக்கு அமைவாக இலங்கையில் தீர்வு வரும்!

### இந்தியா நம்பிக்கை



இலங்கையின் தலைமைத்துவம் தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையைத் தீர்ப்பதற்காக அரசமைப்பிற்கு உட்பட்டு தீர்வு காணப்படும் என எதிர்ப்பார்ப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ☞10

## குருந்தூர்மலை விடயம்; கிடைத்தது நல்ல தீர்ப்பு

### விகாரை உள்ளிட்ட அனைத்துக் கட்டுமானங்களையும் அகற்றுமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ஆலய வளாகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரை உள்ளிட்ட அனைத்துக் கட்டுமானங்களையும் ☞10

## 4 பில்லியன் டொலர் சீனக் கடன் கிட்டும்?

சீனாவிடமிருந்து நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் ஒரு லட்சத்து 45 ஆயிரம் கோடி ரூபா) பெற்றுக் கொள்ள பேச்சு நடத்தி வருவதாக சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கொஹொன தெரிவித்துள்ளார். இக்கடன் மிகவிரைவில் கிடைக்கப்பெறும் எனத் தாம் நம்புகிறார் எனவும் பாலித கொஹொன குறிப்பிட்டுள்ளார்.




தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செய்தியாளர் தொலைபேசி மூலம் அவருடன் தொடர்பு கொண்டார்.

"பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று இருக்கின்றார். இது தொடர்பில் அவருக்கும், தமிழ் மக்களுக்கும் நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?" என்று தூண்டில் போட்டார் நம் ஆள்.

"இந்த விடயத்தில் நாங்கள் அதிகம் கலந்து கொள்ள விரும்பவில்லை. காரணம் என்னவென்றால் அவர்கள் தங்களுக்குள் முரண்பட்டு மோதுகின்றார்கள். நாங்கள் கருத்து வெளியிட்டு, அந்த விடயத்தில் சம்பந்தப்பட்டால் அதை அவர்கள் தங்களுக்குச் சார்பாகவோ அல்லது எதிராகவோ பயன்படுத்துவார்கள். அதனால் நாங்கள் இந்த விடயத்தில் கருத்துக் கூற விரும்பவில்லை" என்றார் சம்பந்தன்.

முதிர்ச்சியான தலைவர். அனுபவம் – பட்டறிவு – பாடமாகப் போதிக்கப்படுகின்றது. கூட்டமைப்பின் அடுத்த கட்ட – மட்ட – தலைவர்கள் அவரிடம் அதிகம் கற்க வேண்டி இருக்கின்றது.

★ ★ ★

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி நிச்சயம் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ஒரு பக்கம் ரணில். மற்றைய இருவரும் சஜித்தும் டலஸ் அழகப்பெருமவும்.

இதில் சஜித்தும் டலஸ் அழகப்பெருமவும் இணக்கத்துடன் பிணக்குப்படுகின்றார்கள். நான் அப்படி குறிப்பிடுகின்றமையைப் பார்த்து குழம்புகின்றீர்களா? உண்மை அதுதான்.

டலஸ் ஜனாதிபதி, சஜித் பிரதமர் என்ற ஏற்பாடுதான் – இணக்கம்தான் – இரண்டு தரப்புகள் மத்தியிலும் நேற்று முன்தினம் வரை தெளிவாக இருந்தது.

ஆனால் இடையில் விமல் வீரவன்ஸ, வாசுதேவ போன்றோர் தலையை நீட்டிக் குசும்பு பண்ணியமையால் விடயம் குழம்பி விட்டது.

எனினும் ஓர் அடிப்படையில் இன்னும் இணக்கம் நீடிக்கின்றது. அது – தங்களின் ஒருவர் ஜனாதிபதி, மற்றவர் பிரதமர் என்ற ஏற்பாடுதான்.

ஜனாதிபதி தேர்தலில் இருவரும் போட்டியிடுவது. வென்றவர் மற்றவரைப் பிரதமர் ஆக்குவது என்பதுதான் இப்போதுள்ள 'ஜென்டில்மேன் அக்ரிமெண்ட்' என்கின்ற விடயமறிந்த வட்டாரங்கள்.

இப்படி நாடாளுமன்றத்தில் நடைபெறும் தேர்தலில் இரண்டு பேரும் வாக்குகளைப் பிரித்தால் அது ரணிலின் வெற்றியை உறுதிப்படுத்தாதா என்ற கேள்வி எழுகின்றது.

தேர்தல் முறைமையை அதற்கேற்ப பயன்படுத்த இரு தரப்புக்களும் உடன்பாடு கண்டுள்ளன.

மூன்று வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தலில் எம்.பிக்கள் ஒவ்வொருவரும் ஒன்று, இரண்டு என தமது விருப்பத் தெரிவின் ஒழுங்கில் இரண்டு பேருக்கு வாக்களிக்கலாம்.

முதல் வாக்குகளே முதல் சுற்றில் கணக்கெடுக்கப்படும். ஏதேனும் ஒரு வேட்பாளர் ஐம்பது வீத வாக்குகளைத் தாண்டிப் பெற்றிருந்தால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்கப்படுவார். அப்படி இல்லாவிடில் தேர்தலில் மூன்றாவதாக வருபவர் முதலில் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். அவருக்கு வாக்களித்தவர்களின் வாக்குச் சீட்டில் இருக்கும் இரண்டாவது தெரிவு அதனடிப்படையில் மற்றைய இருவரின் வாக்குகளுடன் சேர்க்கப்படும். அதன் முடிவில் யார் அதிக வாக்குகளைப் பெற்றவராக இருக்கின்றாரோ அவர் ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார்.

விளக்கத்துக்காக விடயத்தைச் சற்று விரித்து கூறுகிறேன். தேர்தலில் ஏ,பி,சி என மூவர் போட்டியிடுகின்றனர் என வைத்துக் கொள்வோம். முதல் சுற்றில் 'ஏ'க்கு நூறு வாக்குகள். 'பி'க்கு 85 வாக்குகள். 'சி'க்கு 40 வாக்குகள் விழுந்தன என வைப்போம். இப்போது மூன்றாவதாக வந்த வேட்பாளர் சி போட்டியிலிருந்து விலக்கப்படுவார். அவருக்கு விழுந்த 40 வாக்குகளில் அடுத்த தெரிவாக யார் ஒரு பதியப்பட்டு இருக்கின்றார் என்பது கணக்கெடுக்கப்படும். அந்த 40 வாக்காளர்கள் எம்.பிக்களில் 35 பேர் தமது இரண்டாவது தெரிவு வாக்கை பிக்கு அளித்திருந்தால் அந்த 35 வாக்குகளும் அவருக்கு ஏற்கனவே விழுந்த 85 வாக்களுடன் சேர்க்கப்பட அவரின் வாக்குகளின் எண்ணிக்கை 120 ஆகும். அந்த 40 வாக்காளர்கள் எம்.பிக்களில் 05 பேர் ஏக்கு தமது இரண்டாவது தெரிவு வாக்கை அளித்து இருந்தால், ஏற்கனவே அவருக்கு விழுந்த நூறு வாக்குகளுடன் அந்த ஐந்து வாக்குகளும் சேர்க்கப்பட அவரது மொத்த வாக்கு எண்ணிக்கை 105 ஆகும். இதன் அடிப்படையில் பி வெற்றிபெற்றவர்எனஅறிவிக்கப்படுவார்.

இந்த அடிப்படையில்தான் சஜித்தும் டலஸ் அழகப்பெருமவும் களத்தில் இறங்குகின்றனர். சஜித்துக்கு வாக்களிப்போர் தங்களது இரண்டாவது தெரிவாக டலஸையும், அதேசமயம் டலஸுக்கு வாக்களிப்போர் தமது இரண்டாவது தெரிவாக சஜித்தையும் ஆதரிக்கும்படிய இரு வேட்பாளர்களுமே கூட்டாகக் கோரிக்கை விடுப்பார்கள் என்று தெரிகின்றது.

இப்படிச் செய்தால் டலஸும் சஜித்தும் தாங்கள் தங்களுக்குள் பலப்பரீட்சை செய்யும் அதே நேரம், இருவரும் சேர்ந்து ரணிலுடனும் மோதலாம் என்று கருதுகின்றனர்.

மொட்டுக் கட்சியைப் பொறுத்தவரை அது ராஜபக்ஷக்களுக்கென்று ராஜபக்ஷக்களினால் ஸ்தாபிக்கப்பட்ட கட்சி. சுயாதீனமாக எதிரணியின் பொது வேட்பாளராக 2015 தேர்தலில் போட்டியிட்ட மைத்திரி, தேர்தலின் பின்னர் சு.கவின் தலைமை பதவியை மஹிந்தவிடமிருந்து கைப்பற்ற, கட்சியை விட்டு ஓடிப் புது கட்சி தொடங்க வேண்டிய நிர்ப்பந்தம் ராஜபக்ஷக்களுக்கு ஏற்பட்டது.

இப்போது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக டலஸோ அல்லது வேறு யாரோ நின்று வென்றால் மொட்டு கட்சியும் அத்தகைய புதிய ஜனாதிபதியின் ஆளுகைக்குள் சிக்குப்பட்டுவிடும். அப்படி நேர்ந்தால் மீண்டும் ஒரு புதுக் கட்சியை ஆரம்பிக்க வேண்டிய இக்கட்டு ராஜபக்ஷக்களுக்கு நேரும். அதைத் தவிர்ப்பதற்காகக் கட்சிக்குள் இருந்து ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்து, ஜனாதிபதியாக்க விரும்பாத ராஜபக்ஷக்கள், தமது மொட்டுக் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாத – பிறிதொரு கட்சியின் தலைவரான – ரணிலை ஜனாதிபதியாக்கித் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு, தங்களின் மொட்டு கட்சி மீதான அதிகாரம் தங்களது கையை விட்டுப் போகாமலும் இருப்பதை உறுதிப்படுத்த விரும்புகின்றனர் என்று தெரிகின்றது.

இன்றைய நிலைமையின் படி புதன்கிழமை ஜனாதிபதி தேர்தல் நாடாளுமன்றத்தில். அது பெரும்பாலும் மும்முனைப் போட்டியாகவே இருக்கும்.

– மின்னல் –

---

## எவருக்கு ஆதரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிடவுள்ள அதே வேளை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெருமவும் அந்தப் பதவிக்குப் போட்டியிடவுள்ளார்.

இந்நிலையில், கட்சியின் வேட்பாளரையே ஆதரிக்க வேண்டும் என்றும், இதன்படி டலஸ் அழகப்பெருமவைத் தவிர வேறு எவரையும் கட்சி ஆதரிக்க முடியாது என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தீர்மானித்துள்ளது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதனால் கட்சியின் உறுப்பினர்களுக்கிடையே குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், கட்சி இரண்டாகப் பிளவடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

---

## ஜனாதிபதித் தெரிவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடத்தப்படவுள்ளது. ஜனாதிபதிப் பதவிக்கு மும்முனைப் போட்டி நிலவக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும ஆகிய மூவரும் போட்டியிடத் தயாராகியுள்ளனர்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது எனச் சுமந்திரன் எம்.பியிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதிதான் வேட்புமனுத் தாக்கல் இடம்பெறவுள்ளது. அன்றுதான் புதிய ஜனாதிபதித் தெரிவுக்காக யார் யார் போட்டியிடுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். எனவே, 19ஆம் திகதி வேட்புமனுத் தாக்கலின் பின்னர் அன்றைய தினமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி எந்த வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பில் முடிவு எடுப்போம். அதுவரைக்கும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடனும் நாடாளுமன்றத்திலுள்ள பிரதான கட்சிகளுடனும் பேச்சுக்கள் தொடரும் – என்றார்.

---

## 20இல் களமிறங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இது எனது தனிப்பட்ட முடிவு அல்ல. எனது கட்சியின் தீர்மானத்தின் பிரகாரமே நான் இந்த முடிவை எடுத்துள்ளேன்.

மோசடியாளர்களிடம் நாட்டைக் கையளிக்க நான் விரும்பவில்லை.

மக்கள் போராட்டம் ராஜபக்ஷக்களை ஓட ஓட விரட்டியளித்துள்ளது. போராட்டக்காரர்கள் ஊழல், மோசடி இல்லாத புதிய ஆட்சியைக் கோரி நிற்கின்றனர். அவர்களின் கோரிக்கைகளை எடுத்து நோக்கினால் எனக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டும் இல்லை.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தீர்மானத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் நான் போட்டியிடவுள்ளேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும், அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் கட்சிகளும் எனக்கு ஆதரவளிப்பார்கள்என்றுநம்புகின்றேன்.

மக்கள் விடுதலை முன்னணியுடனும் பேச்சுக்கள் தொடர்கின்றன – என்றார்.

---

## முதலில் நாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்தார்.
பதில் ஜனாதிபதியாக நேற்று நண்பகல் பதவியேற்ற பின்னர் ஆற்றிய விசேட உரையின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற ஜனநாயகத்தை இல்லாதொழிக்க எந்தக் குழுவுக்கும் இடமளிக்கமாட்டேன்.

அரசமைப்புக்கு அப்பால் சென்று செயற்படத் தயாரில்லை.

அடுத்த வாரம் தெரிவாகும் புதிய ஜனாதிபதிக்கு '19' ஐ விரைவில் முன்வைக்கக் கூடியதாக இருக்கும்.

போராடும் உரிமை உள்ளது. வன்முறையை அனுமதிக்க முடியாது.

போராட்டக்காரர்களுக்கும், கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. போராட்டக்காரர்கள் சட்டத்தின் பிரகாரம் செயற்படுபவர்கள் – என்றார்.




# தமிழகத்தில் 7 பேர் தஞ்சம்



(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஜூலை 16

வவுனியா செட்டிகுளத்தில் இருந்து நேற்றும் ஏழுபேர் தமிழ் நாட்டின் தனுஷ்கோடியை அண்டியுள்ள தீடையைச் சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து தொடர்ந்தும் பலர் தமிழ் நாட்டிற்கு அகதிகளாகச் செல்லும் நிலைமையில் நேற்றும் 7 பேர் அகதிகளாகச் சென்றடைந்துள்ளனர்.

இந்த அகதிகளை இந்தியக் கரையோரக் காவல்படையினர் மீட்டு மரையன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் அவர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

---

## ஜனாதிபதிப் பதவிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமைச்சருமான டலஸ் அழகப்பெரும நேற்று அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அதற்கான வேட்பு மனுக்கள் கோரப்படவுள்ளன.

இதன்போது தான் வேட்புமனுவைத் தாக்கல் செய்வார் என்று அவர் அறிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

---

## மஹிந்த, பஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நிலையில், அவரின் சகோதரர்களான மஹிந்தவும் பஸிலும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கு உயர்நீதிமன்றத்தால் நேற்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் இவர்களுக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் அனுமதியின்றி இவர்கள் வெளிநாடு செல்ல முடியாது என ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக சிவில் செயற்பாட்டாளர்கள் சிலரால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்றம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

மத்திய வங்கி ஆளுநர்களாக இருந்த டபிள்யூ.டி.லக்ஷமன், அஜித் நிவாட் கப்ரல், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோருக்கும் இவ்வாறு பயணத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொடரும் கர்மவினை

தமக்குத் தந்த ஆட்சியை இரண்டரை வருடங்களுக்குள் போட்டடித்து விட்டுத் தப்பியோடி விட்டார் கோட்டாபய ராஜபக்ஷ.

அதற்கிடையில் –

அவரது மூத்த சகோதரருக்கும், இளைய சகோதரருக்கும் எதிராக நீதிமன்றம் பயணத் தடை விதித்திருக்கின்றது.

அவரது ஆட்சிக் காலத்தில் பிரதமராகவும் நீதி அமைச்சராகவும் இருந்த மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ, கடைசி ஆறு மாத காலம் நிதி அமைச்சராக இருநத இளைய சகோதரர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் வெளிநாட்டுக்குப் பயணம் செய்ய – நாட்டை விட்டு வெளியேற – வரும் 28ஆம் திகதி வரை உயர் நீதிமன்றம் தடை விதித்திருக்கின்றது. அன்றைய தினம் இது தொடர்பான வழக்கை விசாரித்து மேற்கொண்டு தடையை நீடிப்பது குறித்து நீதிமன்றம் முடிவு செய்யும்.

இதில் பஸில் ராஜபக்ஷ ஏற்கனவே அமெரிக்கா செல்வதற்காக சில தினங்களுக்கு முன்னர் கட்டுநாயக்கா வரை சென்று, அங்கு குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் அவரை மேற்கொண்டு பயணிக்க ஒத்துழைக்காதமையால் வேறு வழியின்றித் திரும்பியவர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நாட்டின் பொருளாதார நிலைமை மோசமடைந்தமைக்கு அதனைக் கையாண்ட தரப்புகளே பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

அந்த வரிசையில், கோட்டாபய காலத்தின் இரண்டு நிதி அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநர்களாக இருந்த டபிள்யூ.டி.லக்ஷமன், அஜித் நிவாட் கப்ரால், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆர்டிகல ஆகியோருக்கும் இவ்வாறு பயணத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடு பொருளாதார ரீதியில இந்த நிலைமைக்குப் போனமைக்கான காரணம் கண்டறியப்பட வேண்டும். தவறிழைத்தவர்கள் பொறுப்பு கூறவேண்டும். அதற்கு முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

எது, எப்படி என்றாலும், அத்தகைய பொருளாதாரப் பெருவீழ்ச்சி ஏற்பட்டமைக்கு முதல் பொறுப்பு ஏற்க வேண்டியவர் அச்சமயம் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷதான். ஜனாதிபதி பதவி அதிகாரத்தைப் பயன்படுத்தியே தப்பிச் சென்று விட்ட அவரை இலங்கைச் சட்டத்தின் முன் கொண்டு வந்து நிறுத்த வாய்ப்புக் கிட்டுமா என்பதற்குக் காலம் தான் பதில் கூறவேண்டியிருக்கும்.


பொருளாதார நெருக்கடிக்கு மட்டுமல்ல, அதற்கு முன்னர் அவர் இழைத்தவை என்று கருதப்படும் பல குற்றங்களுக்கும் சேர்த்து அவர் பதிலளிக்க வேண்டிய வேளை இப்போதுதான் பிறந்திருக்கின்றது.

பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது இடம்பெற்ற 'மிக்' விமானக் கொள்வனவு டீல் ஊழலிலிருந்து யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற பல மோசமான செயற்பாடுகளுக்கு பல தளத்தில் அவர் பதில் சொல்ல வேண்டிய கால கட்டம் உருவாகியிருக்கின்றது.

யுத்த வெ(ற்)றிக்காகப் பல்லாயிரம் அப்பாவி மக்களைக் கொன்றொழித்த பாவம் – கர்மா – சும்மா விடாது. துரத்தும். பெரு வெற்றியீட்டிக் கிடைத்த உயர் பதவியைக் கூட அனுபவிக்க விடாமல், இருந்த காலம் முழுவதும் அல்லலுற வைத்து, அரைவாசி வேளையோடு எழும்பித் தலைதெறிக்கத் தப்பியோடும் நிலைக்குக் கலைத்திருக்கின்றது செய்த பாவம்.

# சர்வதேச நாணயநிதியத்துடன் இடம்பெறவுள்ளது ஒப்பந்தம்!

## நம்பிக்கை வெளியிட்டுள்ள சாந்தா தேவராஜன்



தொழில்நுட்ப மட்டத்தில் பேச்சு இடம்பெற்றவுடன் நாட்டுக்கான நிதியை பெற்றுக் கொள்ளலாம் என ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழக பேராசிரியரும், உலக வங்கியின் முன்னாள் தலைமை பொருளாதார நிபுணருமான சாந்தா தேவராஜன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி அவர், ப்ளூம்பெர்க் டிவியிடம் அளித்த செவ்வியொன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் தற்போது தலைமைத்துவ வெற்றிடம் இருந்தாலும் செப்ரெம்பர் – ஒக்ரோபர் மாதத்துக்குள் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மீட்பு பொதியை பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மற்றும் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோரின் தலைமையில் சர்வதேச நாணய நிதியத்துடன் அலுவலர் மட்ட தொழில்நுட்ப பேச்சுகள் முன்னெடுக்கப்படும்.

மேலும், பேச்சு முன்னெடுக்கப்பட்ட அடுத்த மூன்று வாரங்களுக்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் அலுவலர் மட்ட உடன்பாடு எட்டப்படும்.

இலங்கையின் அரசியல் அமைதியின்மை மற்றும் அடுத்த தலைவர் யார் என்பதில் நிச்சயமற்ற நிலை இருந்தாலும், தொழில்நுட்ப மட்டத்தில் பேச்சுகள் முன்னர் போலவே தொடரும்.

அலுவலர் மட்ட உடன்பாடு எட்டப்பட்டவுடன், செப்ரெம்பர் – ஒக்ரோபர் மாதத்துக்குள் பிணை எடுப்பு பொதிக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு அளவிலான ஒப்புதலை, நாடு பெறும்.

அத்துடன் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிலிருந்து இலங்கை இந்த வருடத்தில் 3 – 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்ள முடியும்.

நாடு பொருளாதார நெருக்கடியின் உச்சத்தை எட்டியுள்ள நிலையில், குடிமக்கள் மீதான வலியைக் குறைக்க, இந்த இடைக்கால நிதியுதவி நாட்டுக்கு முக்கியமானதாக இருக்கும்.

தற்போதுவரை எரிபொருள், மருந்துகள் மற்றும் உணவை பாதுகாக்க நாட்டுக்கு சுமார் 400 கோடி அமெரிக்க டொலர்களை இந்தியா வழங்கியுள்ளது.

இது தவிர, சீனா மற்றும் ஜப்பானிடம் இருந்தும் இடைக்கால நிதியுதவியை இலங்கை அரசாங்கம் நாடியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## மீண்டும் குமுறுகிறார் சுப்ரமணியம் சுவாமி

இலங்கையில் நடந்து வரும் போராட்டங்களுடன் நாட்டின் நாடாளுமன்றத்தில் மூன்று நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அந்த கட்சிக்கு சிறந்த ஒருங்கிணைப்பு பலம் இருப்பதாகவும் இந்திய பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும் மாநிலங்கள் அவை உறுப்பினருமான சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜே.வி.பி. புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்ற முயற்சித்து வருகிறது.

இலங்கையில் நடக்கும் போராட்டங்களுடன் ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணிக்கு தொடர்புள்ளது. 20, 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஜே.வி.பி. என்பது மிகவும் கொடூரமான வன்முறை அமைப்பாக அறியப்பட்ட அமைப்பு. அந்த அமைப்பு அந்த காலத்தில் அடக்கப்பட்டது.

இன்று மூன்று நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. சிறிய கட்சி என்றாலும் நல்ல அமைப்பு. சம்பந்தப்பட்ட கட்சி புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்து வருகிறது.

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்கள். தேர்தலில் அவர்கள் வெற்றி பெற்றனர். தேர்தலில் எந்த சர்ச்சையும் இருக்கவில்லை.

அவர்கள் கொண்டாடப்பட்டவர்கள். இராணுவ ஆட்சியாளர்கள் அல்லர். அவர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஒரு குழுவால் ஏன் அவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

பதவி விலகுவதற்கு அவர்களுக்கு உளவியல் ரீதியாக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி இந்தியாவுக்கு மிகவும் ஆபத்தானது. அந்த நாடு எமது எல்லையில் உள்ளது.



அது தீவு நாடு. இந்தியாவை எதிர்க்கும் ஏராளமான மக்கள் உள்ளனர். சீனா, மியன்மார், பாகிஸ்தான் ஆகியன அங்கு நிலை கொண்டுள்ளன.

இந்தியா இதனை மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொண்டுள்ளது என நான் நினைக்கின்றேன். இந்தப் பிரச்சினை இந்தியாவுக்கு மிகப் பெரியளவிலான தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதால், தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

தேவையான நடவடிக்கைகளைத் தற்போதே எடுக்க வேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளில் இருந்து ராஜபக்ஷவினர் விலகி சென்றுள்ளனர். இராணுவத்தை அனுப்பி வைக்குமாறு கூட அவர்கள் கேட்டிருக்கலாம்.

அவர்கள் கேட்டிருந்தால், இந்திய இராணுவத்தை அனுப்பி இருக்கலாம். அழைக்காமல் இராணுவத்தை தரையிறக்கி மற்றுமொரு நாட்டைக் கைப்பற்ற முடியாது.

இந்தியா போன்ற நாட்டை தலையிட்டு இராணுவத்தை அனுப்பி அமைதியை நிலைநாட்டுமாறு இலங்கை மக்கள் கோரிக்கை விடுக்கும் வரை காத்திருக்கின்றோம்.

அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு எந்த ஒரு காரணமும் இல்லை. ஆனால், அது தொடர்ந்தும் நீடித்து வருகிறது. இலங்கை சம்பந்தமாக அமெரிக்கா இன்று அல்லது நாளை அறிக்கை ஒன்றை வெளியிடும் எனவும் சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

# மரியதாஸனால் மாண்புறும் ‘மண்ணின் மைந்தன்’ விருது



சிவஞானம் சிறீதரன்
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஆசிரியத்துவத்துக்கான அடையாளமாக விளங்கும், எனது மதிப்பார்ந்த ஆசான் திரு.எட்வேட் மரியதாஸன் அவர்களுக்கு, கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் பிரித்தானியக் கிளையினரால் ‘மண்ணின் மைந்தன்’ விருது வழங்கப்படுவதையிட்டு, அவரால் உருவாக்கப்பட்ட மாணவனாக நான் மகிழ்வும், மனநிறைவும் அடைகிறேன்.

கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி, கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளில், நீண்டகாலம் கணிதபாட ஆசிரியராகக் கடமையாற்றிய இவர்தான், நான் உள்ளிட்ட ஒரு பெரும் மாணவ சமுதாயத்தின் முன்மாதிரி. கற்பித்தல் என்கின்ற தனது கடமையைத் தாண்டி மாணவர்களின் நடை, உடை, பாவனையில் கவனமும், கண்டிப்பும் மிக்கவராக இருந்த அவர் இட்ட அடித்தளம்தான், அவரிடம் கற்ற மாணவர்கள் அனைவரும் தனிமனித ஒழுக்கத்தில் தலைசிறந்தவர்களாக இன்றளவும் இருப்பதற்குக் காரணம்.

தனியார் கல்வி நிலையங்கள் தோற்றம் பெற்றிருக்காத எண்பதுகளின் முற்பகுதியில், சரியாக காலை 6 மணிக்கு அவரது கணிதபாட வகுப்பு பாடசாலையில் நடைபெறும். அச்சொட்டாய் அந்த நேரத்துக்கு வருகைதரும் அவரது பணி ஆர்வம் – தனது மாணவர்களை அவர்களது பெற்றோரின் பெயர்சொல்லி அழைக்குமளவுக்கு மாணவர்களின் பெற்றோரோடு அவர் கொண்டிருந்த இடைத்தொடர்பு – அவரது கற்பித்தல் பாங்கு – மாணவர்களின் ஆடை அணிதல் முதல் சிகையலங்காரம் வரை அவர் கொண்டிருந்த கண்டிப்புடன் கூடிய கரிசனை என்பவை, கல்விப் புலத்தினுள் ஆசிரியர்களாக நுழைந்த என் போன்ற பலருக்கும் வழிகாட்டியது என்றால் அது மிகையல்ல.

ஆசிரியப்பணிக்கு அப்பால், மிகச்சிறந்த கலைஞனாக, நாடக நடிகனாக, பயிற்றுவிப்பாளராக, அறிவிப்பாளராக என அவருக்கிருந்த பல்துறைசார் கலையுணர்வின் வெளிப்பாடு தான், இந்த மாவட்டத்தின் கலை, பண்பாட்டு, விழுமியங்களைக்கட்டிக்காக்கும் நீண்டகால இலக்கோடு உருவாக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட கலை, பண்பாட்டுக்கழகத்தின் முதலாவது அதிபராக அவரை அலங்கரித்திருந்தது. அந்த நிறுவனத்தின் அதிபராகப் பதவியேற்ற பின்னர் 1990ஆம் ஆண்டு, மருதநகர் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் மூன்று நாள்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற தியாகத்தின் தாய், அன்னை பூபதி அவர்களின் நினைவுநாளை கலை, பண்பாட்டு நிகழ்வுகளோடு இணைந்த எழுச்சிமிகு நினைவேந்தலாக நிகழ்த்திக்காட்டியிருந்தமை அவரது ஆளுமை வெளிப்பாட்டின் வடிவமே ஆகும்.

இதுதவிர, கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் தடவையாக உள்ளீர்க்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட போதனாசிரியராக இருந்து, அவர் இந்த மாவட்டத்தின் ஆசிரிய வள உருவாக்கத்துக்காக ஆற்றிய பணி காலம்கடந்தும் போற்றுதற்குரியதே!. இந்த மாவட்டத்தின் கல்விச் சரித்திரத்தில் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரனான அவர் தான், கிளிநொச்சியில் ‘விஞ்ஞானக் கல்வி நிலையத்தை’ உருவாக்குவதற்கும் காரணமானவர். ஆசிரிய வளங்களுக்கான மட்டுப்பாடு மிகுந்திருந்த அன்றைய காலச்சூழலில் உயர்தரம் கற்கும், இந்த மாவட்ட மாணவர்கள் அல்லற்படக்கூடாது என்ற குறிக்கோளோடு, யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பல பிரபல உயர்தர ஆசிரியர்களை கிளிநொச்சிக்கு அழைத்து முதன் முதலில் பிரத்தியேக வகுப்புக்களை ஏற்படுத்தித் தந்த பெருமையும் அவரையே சாரும்.

குருகுலம் சைவச்சிறுவர் இல்லத்திலிருந்து உயர்தரம் கற்ற எனது குடும்ப நிலையறிந்து, விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் உயர்தரம் முழுமைக்கும் இலவசமாகக் கற்பதற்குரிய அனுமதியைப் பெற்றுத்தந்து, தன் தோற்றம், தனிமனித ஒழுக்கம், சிந்தனை, செயல், நன்னடத்தை என்பவற்றால் என் மனமெங்கும் நீங்கா இடம் பிடித்த மரியதாஸ் சேரால் தான், நான் அறிவுலகினுள் நுழைவதற்கான கதவு அகலத் திறக்கப்பட்டது என்பதையும், இன்றிருக்கும் என் நிலைக்கு அடித்தளமிட்டது அவரே என்பதையும் என்றென்றைக்கும் நன்றியோடு நினைவிற் கொள்வதில் அவரின் மாணவனாக நான் பெருமிதம் அடைகிறேன்.

‘ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்’ என்ற திருக்குறள்தான் அவர் வாழ்வின் குறிக்கோளாய் இருந்தது. தன் மாணவர்கள் ஒவ்வொருவரையும் அந்தக் குறளின்வழி வழிநடத்த விளைந்த அவர், அதில் வெற்றியும் கண்டிருக்கிறார். அணைக்குமிடத்தில் அணைத்து, அடித்துத் திருத்த வேண்டிய இடங்களில் அவர் காட்டிய கண்டிப்பும், தண்டிப்பும்தான் பின்வந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தவறுகளைத் தவிர்ப்பதற்கு எம்மைத் தயார்ப்படுத்தியிருக்கிறது.

மரியதாஸ் சேரின் மகத்துவமான இந்தக் கல்விப் பணிக்குச் சாட்சியமாக கிளிநொச்சி மாவட்டத்தில்கருவாகி,உருவாகிநிற்கும்எண்ணிலடங்கா மருத்துவர்கள், பொறியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், துறைசார் தொழில்முனைவோர், மக்கள் பிரதிநிதிகள் என்ற சமூக அந்தஸ்துள்ள மாணவர் அணியொன்று உருவாகி நிற்பதென்பது எந்த அளவுக்கு பெருமை தருகிறதோ, அதைவிட பன்மடங்கு பெருமைக்குரிய விடயம், மரியதாஸ் சேர் எனும் மாண்புறு சிற்பியால், அவரது மாணவர்கள் அனைவரும் தமது சமூகத்தையும், சக மனிதர்களையும் நேசிக்கின்ற ‘மனிதம் நிறைந்த மனிதர்களாக’ செதுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தான்.

இவற்றுக்கு அப்பால், இந்த மண்ணின் விடுதலை என்னும் சத்திய இலட்சியத்துக்காக முன்னெடுக்கப்பட்ட இனவிடுதலைப்போராட்டத்தையும், தமிழினத் தலைவரையும் மானசீகமாக நேசித்த இவரிடம் கற்றுத்தேர்ந்த பலநூற்றுக்கணக்கான மாணவர்கள், இந்த மண்ணையும் மக்களையும் இதயசுத்தியோடு நேசித்து அதற்காகத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் துறந்த மாவீரர்களாயும், போராளிகளாயும் மாறியிருந்தார்கள் என்பதும் மரியதாஸ் சேரின் வாழ்க்கைப் புத்தகத்தில் கனதியும், காத்திரமும் மிக்க பக்கங்கள்.

‘சில விருதுகளால் மனிதர்கள் பெருமைப்படுத்தப்படுவதும், சில மனிதர்களால் விருதுகள் பெருமைப்படும் வரலாறுகளும் உள்ளன’ அந்தவகையில், மாசற்ற மனிதன், மகத்துவம் நிறை ஆசான் திரு.எட்வேட் மரியதாஸன் அவர்களுக்கு ‘மண்ணின் மைந்தன்’ விருதை வழங்கிவைப்பதால், கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் பிரித்தானியக் கிளைக்கும், அந்த விருதுக்கும் பெருமை கிடைத்திருக்கிறது.

பல தசாப்தங்களைக் கடந்து, கிளிநொச்சி மாவட்டத்தில் ஓர் ஆசிரியராக, அதிபராக, கணித பாட ஆசிரிய ஆலோசகராக எனப் பல்வேறு பரிமாணங்களில் கருத்தொன்றிக் கல்விப் பணியாற்றி, அன்றும், இன்றும், என்றும் ஆசிரியத்துவத்தின் அடையாளமாகச் சுட்டிச் சொல்லத்தக்க ஆளுமையாக தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து, எம் எல்லோர் மனங்களிலும் மானசீக குருவாக இருந்து இன்றளவும் எம்மை வழிநடாத்துவதற்கான கௌரவமாக ‘மண்ணின் மைந்தன்’ விருதைப் பெறும் மதிப்பார்ந்த ஆசானுக்கு இந்த மாணவனின் மனம்நிறைந்த வாழ்த்துக்களும், வணக்கங்களும்.

‘பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன்’ (குறள்.996)

# நாட்டில் புதிதாக அரசமைக்கும் ஆட்சியாளர்கள் இன, மத, பேதம் கடந்து நிர்வகிக்க வேண்டும்!

## பல அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை

கடந்த ஆட்சியாளர்களுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அவர்கள் அவற்றைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. தற்போது புதிதாக ஆட்சியமைக்கின்ற ஆட்சியாளர்கள் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி, இன, மத, பேதங்கடந்து வீழ்ந்துகிடக்கின்ற நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும்.

–இவ்வாறுகூட்டாகக்கையொப்பமிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளன கொள்கை ஆய்வுக்கான நிலையம், தமிழ் சிவில் சமூக அமையம், தமிழர் மரபுரிமை பேரவை, புமுதி – சமூக மாற் றத்துக்கான அமைப்பு, உண்மைக்கும் மாற்றத்துக்குமான அமைப்பு, நீதிக்கும் அமைதிக்குமான வடக்கு – கிழக்கு குருக்கள் துறவிகள்.

அந்த அறிக்கையின் முழுமையும் வருமாறு –

ஜுலை 13, 2022 அன்று கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையை விட்டு வெளியேறினார். இலங்கைத் தீவின் பெரும்பான்மைச் சிங்கள இனத்தையும், பன்னாட்டுச் சமூகத்தையும் சார்ந்த பலர் இத்தருணத்தை, பல மாதகாலப் போராட்டத்தின் உச்சக்கட்டமாகவும், ஒரு புரட்சிகர நிகழ்வாக அமையக்கூடியதொன்றாகவும் பிரகடனம் செய்துள்ளனர்.

நாட்டின் பெரும்பாலான மக்களை உணவு, எரிபொருள், மருந்துகள் இல்லாமல் தவிக்கவிட்டிருக்கும் முன்னெப்போதும் இல்லாதளவு பாரதூரமான இந்தப் பொருளாதார நெருக்கடியின் போது ஜனாதிபதியாகவிருந்தவரின் வெளியேற்றம் உண்மையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தருணமாகவே உணரப்படுகிறது.

அதிகரித்துக்கொண்டே செல்லும் அரச வன்முறை மற்றும் வன்முறை அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் களநிலைவரம் தொடர்ந்து மாற்றமடைந்து கொண்டிருக்கிற போதிலும், கோரிக்கைகள் பெரும்பாலும் அரசின் உயர் மட்டத்தில் உள்ளவர்களை மாற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், பல தசாப்தங்களாக இன மோதலால் பாதிக்கப்பட்டுள்ள இந்தத்தீவில் உண்மையான மாற்றம் ஒன்று நிகழ்வதற்கு இந்தத் தருணம் வழிவகுக்க வேண்டுமெனில், மேலும் பல விடயங்கள் அந்தக் கோரிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசத்தைப் பொறுத்தவரை, ராஜபக்ஷக்கள் பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் திறமையற்றவர்கள், ஊழல் செய்பவர்கள் என்பதோடு, கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை இராணுவத்தினால் போரின் இறுதியில் இழைக்கப்பட்ட இனப்படுகொலை உள்ளிட்ட பாரிய அட்டூழியக் குற்றச்செயல்களை மேற்பார்வை செய்த போர்க்குற்றவாளி என்பதும் முக்கியமானதொன்றாகவிருக்கிறது.

இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்தத்தீவில் இடம்பெறும் தொடர்ச்சியான வன்முறைகளுக்கு அடிப்படையாகவிருக்கும் சிங்கள – பௌத்தத் தேசியவாதமே, பெரும்பான்மைச் சமூகத்தினரால் ஒரு போர்க்குற்றவாளியாகவல்லாது, ஒரு போர்வீரனாகப் பார்க்கப்பட்ட ராஜபக்ஷவை 2019 இற் பெரும்பான்மைச் சிங்கள வாக்குகளின் மூலம் அதிகாரத்திலமர்த்தியது. தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களை ஒடுக்கும் கொள்கைகளை ராஜபக்ஷ தொடர்ந்தும் முன்னெடுத்தமை பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த வாக்காளர்களாற் புறக்கணிக்கப்பட்டது அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் சிங்கள் – பௌத்தத் தேசத்தின் பாதுகாவலராகப் போற்றப்பட்டார். பாதுகாப்புப் படையினரால் இழைக்கப்பட்ட குற்றச்செயல்களை வெள்ளையடிப்புச்செய்வது, கடந்த சில மாதங்களாகத் தெற்கில் இடம்பெற்றுவரும் போராட்டங்களினதும், அரசியல் உரையாடல்களினதும் ஓர் எச்சரிக்கையடைய வேண்டிய அம்சமாக விளங்குகிறது.

மேலும், இந்தப் போராட்டங்களும், உரையாடல்களும், பாதுகாப்புப் படையினரால் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளை ஒப்புக்கொள்ளத் தவறியுள்ளன. ஜனாதிபதி செயலகம் ஆர்ப்பாட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்ட போதிலும், 2009 இல் இலங்கை இராணுவத் தளபதியாகவிருந்த சரத் பொன்சேகா உள்ளிட்ட பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த போர்க் குற்றவாளிகளென அறியப்படுபவர்களை ஆர்ப்பாட்டங்களின் போது மேடையேற்றியமை, சிங்கள் – பௌத்தம் அம்பலமாக்கியுள்ளது. இந்த வரலாற்றுத் தருணம், சிங்கள – பௌத்தத் தேசியவாதத்தை எதிர்கொள்வதற்கும், தமிழர்களின் நியாயமான நீண்டகாலக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் இனத்துவ அரசியற் கட்டமைப்புகளையும், அட்டூழியங்களின் வரலாற்றையும், அதன் மூலம் இறுதியிற் தற்போதைய நெருக்கடிக்கு வழிவகுத்த மூல காரணங்களையும் எதிர்கொள்வதிற் போராட்டக்காரர்களோ அல்லது அரசியல்வாதிகளோ அர்ப்பணிப்புடன் இருப்பதற்கான எந்த அறிகுறிகளும் தற்போது தென்படவில்லை என்பது தொடர்பாகக் மேலே குறிப்பிடப்பட்ட அமைப்புகளாகிய நாம் கவலை கொள்கிறோம். இது, மேலும் உறுதியற்ற தன்மைக்கும், வன் முறைக்கும், பொருளாதார வீழ்ச்சிக்குமே வழி வகுக்கும். எனவே, அதிகாரத்திலமரும் எந்தவொரு புதிய அரசாங்கமும் பின்வரும் ஐந்து நடவடிக்கைகளையும் உறுதி செய்ய வேண்டுமென அனைத்துப் பங்குதாரர்களையும் வலியுறுத்தும்படி நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்–

1. இத்தீவின் மதச்சார்பற்ற தன்மைக்கும், பல்தேசியத் தன்மைக்கும், அதில் வாழும் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும் மதிப்பளித்து, அரசியல், பொருளாதாரம், நிலம் மற்றும் பாதுகாப்பு அதிகாரங்களை அர்த்தமுள்ள வகையிற் பகிர்ந்தளிக்கும் வகையில் அரசை மறுசீரமைக்கும் ஒரு புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும்.

2. உரோம் சாசனத்தை அங்கீகரித்து, அதைக் கடந்த காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நிறைவேற்றி, போரின் போதும், அதற்குப் பின்னரும் இழைக்கப்பட்ட அட்டூழியக் குற்றங்கள் மீதான சர்வதேச வழக்குகளை ஆதரிக்க வேண்டும்.

3. வரவு – செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு அதிகளவில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைக் குறைத்து, பொருளாதார வளர்ச்சிக்கான செலவினத்துக்காக மறுஒதுக்கீடு செய்வதன் மூலம் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கு, வடக்கிலும், கிழக்கிலும் இராணுவமயமாக்கலை இல்லா தொழிக்க வேண்டும்.

4. வடக்கிலும், கிழக்கிலும் காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அரசியற் கைதிகளின் குடும்பத்தினரால் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதோடு, இதன் ஆரம்பப் புள்ளியாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும்.

5. வடக்கிலும், கிழக்கிலும், அரச அதிகார அமைப்புகளாலும், பாதுகாப்புப் படைகளாலும் நிலம் கையகப்படுத்தப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இலங்கையின் வரலாற்றை நோக்கினால், இத்தீவில் நிலவும் மோதல்களின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும், இந்த நாடு பயணிக்கும் பாதையை மாற்றுவதற்கும், இங்கு அதிகாரத்திலிருந்த அரசாங்கங்களுக்குப் பல சந்தர்ப்பங்கள் வாய்த்திருந்ததைக் காண முடியும். ஆனால், ஒவ்வொரு முறையும் அச்சந்தர்ப்பங்களை அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட அமைப்புகளாகிய நாம், இம்முறை அம்மாற்றம் நிகழும் என்ற நம்பிக்கை யின் அடிப்படையில், நல்லெண்ணத் துடன் இந்த அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.
– என்றுள்ளது.

# ஸ்திரமான அரசு அமையாவிட்டால் நாடு முற்றாக முடங்கும் அபாயம்!

## மத்தியவங்கி ஆளுநர் எச்சரிக்கை



ஸ்திரமான அரசாங்கமொன்றை ஏற்படுத்தாவிட்டால் நாடு முற்றாக முடங்கலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க எச்சரித்துள்ளார். பிபிசியின் நியூஸ் நைட்டுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவசியமான பெற்றோலிய இறக்குமதிக்கான அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது தொடர்பில் பெரும்நிச்சயமற்றநிலைகாணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மீட்பு நிதியை பெறுவது என்பது ஸ்திரமான அரசாங்கத்திலேயே தங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரிய பொருளாதார நெருக்கடி காரணமாகநாடு பெரும்அமைதியின்மையின் பிடியில் உள்ளது .ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பியோடிவிட்டார். பதில் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கஇரண்டாவது நாளாக ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இலங்கை தனது பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது உணவு எரிபொருள் உட்பட சாதாரண மக்களுக்கான அடிப்படைப் பொருள்களின் விலைகள் பெருமளவு அதிகரித்துள்ளன.

பலர் ராஜபக்ஷக்கள் பொருளாதாரத்தைத் தவறாகக் கையாண்டமையே இதற்கு காரணம் என குற்றம்சாட்டுகின்றனர், மே மாதம் பிரதமரான ரணில்விக்கிரமசிங்கவை அந்த பிரச்சினையின் ஒரு பகுதியாகக் கருதுகின்றனர். ஏப்ரல் மாதம் மத்திய வங்கி ஆளுநராக பொறுப்பேற்ற நான், ஸ்திரமான நிர்வாகம் இல்லாவிட்டால் எவ்வாறு அத்தியாவசிய பொருள்களை வழங்கமுடியும் என்பது குறித்து தனக்கு தெரியவில்லை எனக் குறிப்பிட்டார். இந்த மாதம் இறுதிவரை மூன்று டீசல் கப்பல்களுக்கு எங்களால் கட்டணம் செலுத்த முடியும், ஒன்று அல்லது இரண்டு பெற்றோல் கப்பல்களுக்கும் கட்டணம் வழங்க முடியும், ஆனால் அதற்கு அப்பால் நாட்டுக்குப் போதுமான பெற்றோலைப் பெறுவதற்கான அந்நியசெலாவணியை வழங்க முடியுமா என்பது தொடர்பாக நிறைய நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றது என அவர் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

அவ்வாறு அந்நியசெலாவணியை வழங்க முடியாவிட்டால் முழு நாடும் முடங்கும் ஆபத்துள்ளது. இதன் காரணமாகவே தீர்மானங்களை எடுக்கக்கூடிய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை தேவை. அவ்வாறானதொன்று இல்லாவிட்டால் மக்கள் நெருக்கடியில் சிக்குவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடன்மறுசீரமைப்பு தொடர்பாக நிதி வழங்குநர்களுடன் பேச்சுகளை மேற்கொண்டு சிறந்த முன்னேற்றத்தைக் காண விரும்புகின்றோம். ஆனால் இது எவ்வளவு வேகமாக சாத்தியமாகும் என்பது ஸ்திரமான நிர்வாகத்தைப் பொறுத்தது. ஸ்திரமான அரசாங்கம் ஏற்பட்டதும் இலங்கையால் மூன்றுநான்குமாதங்களில்நெருக்கடியிலிருந்து மீள முடியும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**




**01. கேள்வி:-** 'வீடு வந்து சேருமா வேளாண்மை?' எனும் உங்களது கட்டுரை படித்தேன். அதில் முகம் காட்டாத மக்கள் புரட்சிக்குழு என்று எழுதியிருந்தீர்கள். இப்பொழுது அந்தக் குழு முகம் காட்டத் தொடங்கி விட்டது. அவர்கள் நடத்திய கூட்டத்தில் ஆற்றிய கொள்கை உரையைக் கேட்டீர்களா? அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** போராட்டக்குழு முகம் காட்டத் தொடங்கியிருப்பது உண்மைதான். ஆனால் இப்போதும் அக் குழுவுக்கான தலைமை வெளிக்காட்டப்படவில்லை என்பது குறையாகத்தான் இருக்கிறது. அவர்கள் நடத்திய கூட்டத்தினையும் கேட்டேன். இந்நாட்டில் நினைத்தும் பார்க்கமுடியாத, ஆச்சரியப்படும்படியான, அனைத்து இனங்களும் மகிழத்தக்க கொள்கைகளை முன்வைத்தார்கள். வியப்பாக இருந்தது.

இன, மத அடையாளங்களை வைத்துப் பலகாலமாய்ப் பகை வளர்த்து, புரையோடிக்கிடக்கிற இந்த நாட்டில், இவையெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமா? என்று உதித்த சந்தேகத்தையும் தவிர்க்க முடியவில்லை. அன்று, அவர்கள் அறிவித்த கொள்கைகள் நடைமுறைக்கு வந்தால்த்தான் மக்கள் புரட்சி வென்றதாய்க் கருதமுடியும்.

மற்றொன்றையும் சொல்லித்தான் ஆகவேண்டும். 'மக்கள் புரட்சிப் போராட்டம்' எனும் அபூர்வமாய்ப் பயன்படுத்த வேண்டிய ஆயுதத்தை வைத்து, ஆட்சியாளர்களைத் தொடர்ந்து மிரட்டிக் கொண்டிருந்தால், எவராலும் இந் நாட்டுக்கான சரியான தலைமையை வழங்கமுடியாமல்ப் போய்விடும் எனும் உண்மையை இவர்கள் மறந்து விடக்கூடாது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ விண்ணைத் தொடும் இலட்சியங்கள் மண்ணைத் தொடுமா?**

**02. கேள்வி:-** கடைசியில் தண்டனைகளிலிருந்து தப்பி ஜனாதிபதி நாட்டை விட்டு ஓடி விட்டாரே! பார்த்தீர்களா?

**பதில்:-** 'நான் பெரும்பான்மை இனத்தின் தலைவன்' என்று அறிவித்து ஆட்சிக்கு வந்தவர் அவர். அப்பெரும்பான்மை இனத்தாராலேயே துரத்தப்பட்டு ஒளிந்து ஓடியிருக்கிறார். இதைவிட ஒரு பெரிய தண்டனையை அவருக்கு வழங்கமுடியும் என்று நினைக்கிறீர்களா? சாகும்வரை, இந்தத் துன்பம் அவரை விட்டு நீங்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.'

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பது ஏது?'**

**03. கேள்வி:-** மக்கள் புரட்சிக்குழு நடத்திய கூட்டத்தில் சுமந்திரனையும் சாணக்கியனையும் தவிர, மற்றைய தமிழ்த் தலைவர்களைக் காண முடியவில்லையே?

**பதில்:-** நல்லதாய்ப் போயிற்று! எல்லோரும் போயிருந்தால் நீயா? நானா? என்று ஆளுக்காள் மோதி, ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி நம் இனத்தின் மானத்தைக் கெடுத்திருப்பார்கள். போகவேண்டியவர்கள் போயிருக்கிறார்கள். தமிழினத்திற்கு இப் புரட்சியால் நன்மை நடக்கும் என எதிர்பார்ப்போம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ சிங்சக்.. சிங்சக்... சிங்சக்... ஹி.. ஹி.. நீங்கள் தப்பா நினையாதீங்கோ. நான் வாரிதியாருக்குத்தான் தாளம் போட்டனான்.**

**04. கேள்வி:-** மக்கள் புரட்சியாளர்கள் நடத்திய கூட்டத்திற்குச் சுமந்திரனும், சாணக்கியனும் சென்றது பற்றிப் பலரும் விமர்சிக்கிறார்கள் அக்கூட்டத்தில், ரணிலைச் சுமந்திரன் அவ்வளவு கடுமையாக விமர்சித்திருக்கத்தான் வேண்டுமா?

**பதில் :-** போனது தவறென்று சொல்லமாட்டேன். நம் நாட்டில் இன்றிருக்கும் எந்தப் பேரின அரசியல் கட்சியும், மொழி, மதம் கடந்து அனைத்தின மக்களும் சமத்துவமாக வாழும் நாடாக இந்த நாட்டை ஆக்குவோம் என்று வெறும் வெறும் பேச்சுக்குத்தானும் அறிவிக்கமாட்டார்கள் என்பது திண்ணம். பெரிய மக்கள் புரட்சி வெடித்திருக்கும் இந் நேரத்தில் அப் புரட்சியாளர்கள் மேற்படி கொள்கையைத் தமது கருத்தாகத் துணிந்து அறிவித்திருக்கிறார்கள். அத்தகைய ஒரு தலைமையைச் சார்ந்து இயங்க நினைப்பதில் தவறேதும் இல்லை என்றே படுகிறது.

இந்த இடத்தில் மனத்தில் உதிக்கும் மற்றொரு கருத்தையும் சொல்லவேண்டும். புரட்சியாளர்கள் தமது இக் கொள்கையை அவசரப்பட்டு அறிவித்து விட்டார்களோ? என்று கருத வேண்டியிருக்கிறது. ஏனெனில், இந்த நாட்டைக் குறித்த மதத்தினதும் குறித்த மொழியினதும் உரிமைக் களமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பல பேரினவாதிகள், இவர்களின் அறிவிப்பால், மனதளவிலேனும் இவர்களுக்கு எதிராய்த் திரும்புவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதுமட்டுமல்லாமல், ஆட்சியாளர்களை மிரட்டி அடிபணிய வைக்கும் இக் கூட்டத்தாரை, எந்த அரசியல் கட்சியும் கூட விரும்பமாட்டாது என்றுதான் நினைக்கிறேன். மேற் சொன்னவர்கள் ஒன்று சேர்ந்தால், இப் புரட்சியாளர்களுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட வாய்ப்பிருப்பதாய்ப் படுகிறது.

ரணில் மீதான சுமந்திரனின் மிகக் கடுமையான விமர்சனம் பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். சமநிலையற்ற சுமந்திரனது அந்தக் கடுமையான விமர்சனம், நல்லாட்சிக் காலத்தில் ரணிலை நம்பித் தான் ஏமாந்ததற்கான பிராயச்சித்தமாய்ச் செய்யப்பட்டதாகவே கருத வேண்டியிருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'யாகாவராயினும் நா காக்க!'**

**05. கேள்வி:-** சென்ற முறை, சிவபெருமான் சிலையில் தொப்புள் வைப்பது பற்றிய விடயத்தை விவரமாய் எழுதியிருந்தீர்கள். திரு. 'பார்த்தி' என்பவர் எழுதிய அதே கட்டுரையில் சிவபெருமானுக்குச் சிவப்பு வர்ணந்தான் தீட்டவேண்டும் என்றும் எழுதியிருக்கிறார். அதனை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா?

**பதில்:-** தயைகூர்ந்து எல்லாவற்றையும் நான் மறுத்துரைப்பதாய் நினையாதீர்கள். பேசாமல் இருந்து விட்டால் பிரச்சினை இல்லை. ஆனால் தெரிந்த விடயத்தைச் சொல்லாமல் இருப்பது எப்படி? நீங்கள் கேட்டபடியால் சொல்லுகிறேன். நமது சிவனார் நம் சிந்தையையும் கடந்தவர். சித்தமும் செல்லாச் சேட்சியன் என்கிறார் மாணிக்கவாசகர். அதனால் அவர் வடிவத்தையோ, நிறத்தையோ யாரும் நிச்சயித்து உரைக்க முடியாது என்பது திண்ணம். 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே' என்று அப்பர் சுவாமிகளே சொல்லியிருக்கிறார்.

தரிசிக்கிறவர்களுடைய ஆன்ம தகுதிக்கேற்ப இறை வடிவங்கள் தரிசனமாகும் என்று நம் சமயப் பெரியார்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒருவருக்கே கூட, வேறு வேறுபட்ட ஆன்ம நிலையில் இறைத் தரிசனங்கள் வேறுவேறாகும் என்கிறார்கள். விநாயகர் அகவல் பாடிய ஔவையார், முதலில் விநாயகரது நிறத்தைச் செம்மை நிறமாகப் பாடுகிறார் (செந்தாமரைப்பூம் பாதச்சிலம்பு). பின்னர் அவரே அதனைக் கருமை நிறமாகவும் உரைக்கிறார் (நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்). மேற் சொன்ன செய்திக்கு இஃது ஒரு உதாரணம்.

நம் சமய நூல்களில் பல இடங்களில், சிவனது நிறம் செம்மை என்று சொல்லப்படுவதும் உண்மைதான். அதே நேரத்தில் வேறு வேறு நிறங்களையும் சிவனது நிறமாய் அடியார்கள் திருமுறையில் பாடியிருக்கிறார்கள். திருவாசக 'சிவ புராணத்தில்' மாணிக்கவாசக சுவாமிகள், சோதியனே! துண் இருளே! என்று சிவனை விளிக்கிறார். அவர் கூற்றின்படி இறைவன் நிறத்தைக் கருமை என்றும் கொள்ளலாம், செம்மை என்றும் கொள்ளலாம் என்று அர்த்தமாகிறது.

அதுதவிரவும், 'நீத்தல் விண்ணப்பத்தின்' 31ஆவது பாடலில் அவரே சிவனை, வெளியாய்!, கரியாய்!, பச்சையனே! செய்ய மேனியனே! என்று பாடி, சிவனது நிறத்தைப் பல நிறங்களாயும் உரைக்கிறார். எனவே இதுதான் சிவனது நிறம் என்றும், அந்த நிறத்தை சிவனது உருவுக்குத் தீட்டாவிட்டால் குற்றம் என்றும் சொல்வதில் அர்த்தம் இருப்பதாய்த் தோன்றவில்லை. காணாத சிவபெருமானை நம் அறிவு கொண்டு நிர்ணயம் செய்வதை விட்டுவிட்டு, அவ் அறிவு கொண்டு அவனைக் காண முயற்சி செய்வது நல்லது என்பது தானம் எனது கருத்து.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ அப்ப சிவனது ஒவ்வொரு 'பார்ட்டும்' ஒவ்வொரு 'கலராய்' இருக்குமோ. ஹி.. ஹி..**

**06. கேள்வி:-** சென்ற முறை நீங்கள் அளித்த பதில்களில், வாக்கிய பஞ்சாங்கத்தைத்தான் நீங்கள் ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி, 'நாசா' போன்ற விஞ்ஞான மையங்களின் கணிப்போடு நம் பஞ்சாங்கக் கணிப்புகள் ஒத்துப் போவது அவசியமில்லை என்றும் சொல்லியிருந்தீர்கள். காரணம் இல்லாமல் நீங்கள் அப்படிச் சொல்லியிருக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். தயவு செய்து அந்தக் காரணத்தை எங்களுக்கும் தெரிவிக்கலாமே!

**பதில்:-** என்மீது தாங்கள் கொண்ட நம்பிக்கைக்கு முதலில் நன்றிகள். இந்தக் கேள்விக்குப் பதில் எழுதச் சற்றுத் தயக்கமாய் இருக்கிறது. முழுமையாய் உங்கள் கேள்விக்குப் பதில் உரைப்பதானால், அப் பதில் மிக விரிந்துவிடுமோ என்ற அச்சமே அதற்கான காரணம். ஆனாலும் முடிந்த அளவு சுருக்கமாகச் சொல்லப் பார்க்கிறேன். இந்த விடயங்களில் ஆர்வம் இல்லாதவர்கள் என்னை மன்னிப்பார்களாக!

ஒரு உண்மையை நிரூபிக்க, அடிப்படையாக மூன்று 'பிரமாணங்களை' நம் பெரியவர்கள் நிச்சயித்து இருக்கிறார்கள். காட்சி, அனுமானம், ஆகமம் என்பவையே அந்தப் பிரமாணங்கள் ஆகும். ஒரு பொருள் பற்றிக் கண்டறிவது காட்சிப்பிரமாணம். கண்டவற்றை வைத்து அனுமானித்து அறிவது அனுமானப் பிரமாணம். உயர்ந்தோர் கூற ஒன்றை அறிவது ஆகமப்பிரமாணம் ஆகும்.

இதில் காட்சிப்பிரமாணத்தை, மீண்டும் பிரிவுக் காட்சி, பிரிவற்ற காட்சி, மனக்காட்சி, யோகக்காட்சி என வேறு நான்கு விதமாக அவர்கள் பிரிக்கிறார்கள். இக் காட்சிகளுள் யோகக்காட்சி என்பது, யோகமுயற்சியால் வலிமை பெற்று, இயற்கையோடு தம்மைக் கலந்து அனைத்தையும் தரிசிக்கும் காட்சியாகும். மற்றைய மூன்று காட்சிகளும் எல்லோரிடமும் நிகழும். யோகக் காட்சி யோகிகளால் மட்டுமே தரிசிக்கப்படும்.

இந்த யோகக்காட்சியைப் பற்றி, இன்னும் சற்று விரித்துச் சொல்லவேண்டியிருக்கிறது. நாம் நம் உடம்பிலும் வெளியிலும் அமைந்திருக்கும் கருவிகளைக் கொண்டுதான் காட்சிகளைக் காண்கிறோம். யோகிகள் இயற்கையோடு, தாம் கலந்து விடுகிறார்கள். அதனால் அவர்கள் கருவிகளால் காட்சிகளைக் காண்பதில்லை. இயற்கையில் உள்ள பொருள்களில் தம்மைக் கலந்து, தாம் அதுவாகிக் காட்சிகளை உணர்கிறார்கள். அங்ஙனம் யோகிகளால் கண்டுரைக்கப்படும் விடயங்களையே நாம் ஆகமப்பிரமாணம் என்று உரைக்கிறோம். ஆகமப் பிரமாணங்கள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டு ஒத்துக் கொள்ளப்பட வேண்டியவை என்று நம் நூல்கள் சொல்கின்றன. காரணம் அக் காட்சிகளில் தவறு நிகழ வாய்ப்பில்லை என்பதேயாம்.

கருவிகளால் காணப்படும் காட்சிகளில் தவறு நிகழ வாய்ப்புண்டு. கருவிகள் நுண்மைப்பட நுண்மைப்பட காட்சிகளில் மாற்றம் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். அதனால் கருவிக் காட்சிகளை உறுதியான பிரமாணங்களாய் எடுத்துக் கொள்ள முடியாது. அதனால்த்தான் கருவிகளைக் கொண்டு காட்சிகளைத் தீர்மானிக்கும் 'நாசா' போன்ற நிறுவனங்களின் முடிவுகளை உறுதியானவையாய்க் கொள்ளமுடியாது என்று சொன்னேன்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் மாற்றங்களை தமிழர் ஒற்றுமையாக கையாள்வதே எதிர்காலத்துக்குச் சிறந்தது!

## முன்னாள் மாகாணசபை உறுப்பினர் குகதாஸ் கருத்து



தமிழர் அரசியல் மாற்றங்களை நிதானமாகக் கையாள வேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் இளைஞர் அணி தலைவர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்து தெரிவிக்கும் போதெ அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் அனர்த்தத்தை தமிழர் தரப்பு மிகவும் நிதானமாக அவதானித்து தமிழ் மக்களின் அபிலாஷைகளைச் சிதைத்து விடாது முன்னெடுக்க வேண்டும்.

போராட்ட தரப்பிடம் கைத்தட்டு வாங்குவதற்காக தமிழரின் அபிலாஷைகள் சார்ந்த விடயங்கள் இல்லாத கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக சொல்வது எந்த வகையில் நியாயம்?

இந்த நாட்டில் அரசமைப்பை மீறி உடனடி மாற்றங்கள் நிகழ்ந்து விட வாய்ப்பில்லாத போது எதிர்கால மாற்றங்கள் எவ்வாறு அமையும்?

பிராந்திய பூகோள நாடுகளின் இராஜதந்திர வியூகங்களைப் புரிந்து கொள்ளாது தனிப்பட்ட நலன்களுக்காக அதிகாரத்தரப்புக்களை விமர்சித்தல் இனத்துக்கான பின்னடைவாகவே அமையும்.

தமிழர் தரப்பு ஒற்றுமையாக ஒருமித்த நிலைப்பாட்டை நிதானமாகக் கையாள்வதே இனத்தின் எதிர்கால அரசியலுக்குச் சிறந்தது.

பெரும்பான்மை சிங்கள மக்களிடம் நல்லவர் என்ற பெயர் எடுக்க சிங்கள அதிகார வர்க்கத்தைக் காப்பாற்ற கடந்த காலத்தில் நடந்து கொண்ட செயற்பாடுகளை யாரும் மறக்கவில்லை.

உதாரணமாக சமஷ்டியைத் தமிழர்கள் கைவிட்டனர் மற்றும் இனப்படுகொலை நடைபெறவில்லை, போர்க்குற்ற விசாரணை முடிந்து விட்டது, மனித உரிமை பேரவையில் காலநீடிப்பு வழங்கியது போன்ற பல காட்டி கொடுப்புக்களைக் கூறமுடியும்.

ஆட்சி மாற்றங்களும் ஆள் மாற்றங்களும் கடந்த காலத்தில் பல பாடங்களைத் தமிழர்களுக்கும் நாட்டுக்கும் கற்று தந்துள்ளது.

சக இனங்களை மதிக்காது, பௌத்த சிங்கள இன வாதத்தை நோக்கி பொங்கி எழுந்த சிங்கள மக்களுக்கு வரலாறு நல்ல பாடத்தைப் புகட்டியுள்ளது.

இது சிங்கள இளைய தலைமுறையிடம் எதிர்காலத்தில் உறுதியான மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

பௌத்த சிங்கள இனவாதத் தரப்பிடம் பெரிய மாற்றங்கள் துளியளவும் ஏற்படவில்லையெனின், போராட்ட தரப்பு தமிழரின் நியாயங்களை வெளிப்படுத்தும் வரைக்கும் தமிழர் தரப்பு நிதானமாக நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊடகத்துறையினர் மீதான தாக்குதலுக்கு முழுப்பொறுப்பு ரணில் விக்கிரமசிங்கவே!

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் கடும் கண்டனம்




இலங்கையில் தொடர்ந்து வரும் போராட்டங்களில் ஊடகத்துறையினர் மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான முழுப்பொறுப்பையும் ரணில் விக்கிரமசிங்க ஏற்க வேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் அகில இலங்கை மக்கள் ஜனநாயக கட்சி ஆகியவற்றின் தலைவர் எஸ். லோகநாதன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் ஊடகவியலாளர்களை சந்தித்த போது அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர் –

ஊடகத்துறை மீது அடக்குமுறை வேண்டாம். தற்போதைய ஜனாதிபதியை ஓட ஓட விரட்டியவர்கள் ஊடகத்துறையினர். மக்களை ஊடகத்துறை தான் வழிநடத்தியது.

ஆகவே ஊடகத்துறையைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது. நீங்கள் (பிரதமர்) உடனடியாக பதவி விலக வேண்டும். மக்கள் போராட்டத்தில் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர்களுக்கு நீதி நியாயங்கள் கிடைக்க வேண்டும்.

மிலேச்சத்தனமாக பெண் ஊடகவியலாளர்களும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஊடகவியலாளர்களை இந்தப் போராட்டத்தில் தாக்கும் போது இந்த அரசாங்கம் பார்த்துக்கொண்டு இருந்தது.

இதற்கான முழுப்பொறுப்பையும் ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்பேற்க வேண்டும். எனவே ரணில் விக்கிரமசிங்க உடனடியாகப் பதவி விலக வேண்டும். இவ்வாறு விலகி வீடு செல்வதன் ஊடாக உங்களுக்குரிய கௌரவத்தைப் பாதுகாத்து கொள்ள முடியும்.

அத்துடன் எமது தொழிற்சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பாதிக்கப்பட்டுள்ளது. அவர் எம்மை ஏமாற்றி நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார். மிக விரைவில் பொது ஊழியர் சங்க போசகர் பதவியில் இருந்து அவரை எதிர்காலத்தில் நீக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

டக்ளஸ் தேவானந்தா, சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட ஏனைய கட்சி பிரதிநிதிகளாக இருக்கலாம். ஆனால் உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தையும் மக்களையும் ஏமாற்றியவர்களாகவே அவர்களைக் கருதுகின்றோம்.

இப்போது இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை வீட்டிற்கு அனுப்பி விட்டு புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும். கொழும்பு மக்கள் புரட்சி போன்று வடக்கு, கிழக்கிலும் ஒரு புரட்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இதனூடாக புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது நோக்கமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அரச ஊழியர்களுக்கு ஜீலை மாத சம்பளம் வழங்குவதில் எந்தச் சிக்கலும் இல்லையாம்!

அரச ஊழியர்களுக்கான ஜுலை மாத சம்பளம் வழங்குவதில் சிக்கல் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் சூழ் நிலை காரணமாக அரச ஊழியர்களுக்கு ஜுலை மாதத்துக்கான சம்பளத்தை வழங்க முடியாது எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கான சூழல் இல்லை என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு தேவையான பணம் பொதுவாக அந்தந்த நிறுவனங்களின் கணக்குகளில் வைப்பில் இருக்கும்.

எதாவது ஒரு நிறுவனத்தில் பணம் கையிருப்பில் இல்லை எனின் உரிய நிறுவனங்கள் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். ஆனால், அதுபோன்ற எந்த அறிவிப்பும் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஆக, அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் தற்போது எந்த பிரச்சினையும் இல்லை. எனவே, அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்படாது என நிதியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலை காரணமாக அரச ஊழியர்களுக்கு இம்மாத சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அண்மையில் தெரிவிக்கப்பட்டது.

பணத்தை அச்சிடாமல், சம்பளம் வழங்குவதற்குத் தேவையான பணத்தைப் பெற முடியாது என்று அறிக்கைகள் தெரிவித்தன. பணம் அச்சிடுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவை என்றும், ஆனால் தற்போதைய அரசியல் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு அத்தகைய அனுமதியைப் பெற முடியுமா என்பது நிச்சயமற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை ஜனாதிபதி கோட்டாபயவை மாலைதீவு அரசு எப்படி வரவழைத்தது?

## தெளிவுபடுத்தக்கோரி அந்நாட்டு நாடாளுமன்றில் பிரேரணை



இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மாலைதீவு அரசாங்கம் எப்படி வரவழைத்தது என்பதை தெளிவுப்படுத்துமாறு கோரி மாலைதீவு தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை கொண்டு வரவுள்ளது என அந்நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் துன்யா மாமூன் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு அரசாங்கம் எப்படி இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டுக்கு அழைத்து வர அனுமதித்து என்பதைத் தெளிவுப்படுத்த வேண்டும்.

இலங்கை மக்களின் உணர்வுகளைப் பற்றி மாலைதீவு அரசாங்கம் அக்கறை கொள்ளாதமை மிகவும் ஏமாற்றமளிப்பதாக அமைந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் பிரேரணையை கொண்டு வருவது மிக சிறந்த நடவடிக்கையாக இருக்கும் என கருதுகிறேன்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ளேன்.

இலங்கை, பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. மக்கள் தொழில், உணவு, எரிபொருள் இன்றி வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாமல் இருக்கின்றனர்.

இலங்கை மக்களின் அபிலாஷைகளை மாலைதீவு மக்கள் மதிக்கின்றனர். அவர்கள் தற்போதைய அரசாங்கத்தை மாற்ற வேண்டும் என்பதற்காகச் செயற்பட்டு வருகின்றனர்.

அதனை நாம் உணர்வுபூர்வமானதாகக் கருத வேண்டும். இலங்கை மக்கள் தமது எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் ஷன்யா மாமூன் கூறியுள்ளார்.

இலங்கையில் இருந்து விமானப்படை விமானத்தின் மூலம் ஜனாதிபதி மாலைதீவு சென்றமையுடன் அங்கிருந்து நேற்று சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசியக் கட்சிகள் மிகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய மிகமுக்கிய தருணம்

## ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா எச்சரிக்கிறார்



இலங்கையின் அரசியல் வரலாறு மக்களால் முதன் முறையாக மாற்றி எழுதப்படும் அளவுக்கான ஒரு புரட்சியை சுமந்துகொண்டிருக்கின்றது என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு –

நமது நாடு, இவ்விடத்தில் அரசியல் ரீதியில் ஓர் ஆட்சி மாற்றம் நிகழ்வதில் நமக்கு ஆட்சேபனை கிடையாது.

மக்களின் இயல்பு வாழ்வை சாதாரணமான நிலையில் மீளவும் தூக்கி நிறுத்த அரசியல் மாற்றம்தான் அவசியம் என்ற நிலையில் மக்கள் போராட்டக்களமாக வீதிகளை மாற்றிக் கொண்டிருக்கும் நிலையில் இந்நாட்டில் அரசியல் ரீதியில் என்னமாதிரியான முடிவொன்றுக்குச் செல்வது என்ற நிலையில் அரசியல் கட்சிகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றமையும், பதவிக் கதிரைக்கான போட்டியும் ஆசையும் தலைமைத்துவங்களுக்குள் அதிகரித்திருப்பதையும் நாம் தெளிவாகக் காணக் கூடியதாக வுள்ளது.

எந்தச் சிரத்தையுமின்றி எளிதாகக் கிடைக்கும் பொறுப்புமிக்க பதவிநிலையொன்றை யார்தான் விரும்பமாட்டார்கள் என்றே கருத்தாடல்களையும் பரபரப்பையும் பார்க்கும் போது எண்ணத் தோன்றுகின்றது.

தமிழர் தரப்பு தமது மக்களை மறந்து விட்டு நாட்டில் வீசுகின்ற புரட்சிநிலையொத்த அலைக்குள் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள அவசரப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான தருணம் இது. காரணம் நிதானத்தை ஆசைகள் கவ்விட தமது மக்களின் உரிமைசார்ந்த எதிர்பார்ப்பையும் இருப்பையும் காவு கொடுத்துவிடக் கூடியளவுக்கு நமது அரசியல் பிரதிநிதிகள் சிலர் செயற்படுகின்றமை மிகவும் கவலையளிக்கின்றது.

போராட்டக்காரர்கள் இந்நாட்டின் பொருளாதார இறுக்க நிலையால் விளைந்த இயல்புவாழ்வின் நெருக்கடியில் இருந்தே அரசியல் மாற்றத்தைக் கோரி களத்துக்கு வந்தார்கள். மக்கள் வீதிகளில் வரிசையில் நின்று மாளாது கொடும் வெறுப்பின் உச்ச நிலையில் இருந்து இந்த மாற்றம் கோரிய போராட்டம் வடிவம் பெற்றது என்பதை மறந்துவிடக்கூடாது.

பசளையும், மண்ணெண்ணெய்யும், பெற்றோலும் டீசலும் சமையல் வாயுவும் தடையில்லாமல் மக்களுக்குக் கிடைத்திருந்தால் இப்படியொரு மக்கள் போராட்டம் வெடித்திருக்க வாய்ப்புமில்லை. அரசியல் மாற்றம் கோரிய மக்கள் குரல் வீதிக்கு கோஷமாக வந்துமிராது.

எனவேதான், ஆர்ப்பாட்டத்தின் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு தான் அரசியல் முடிவுகளை நோக்கித் தமிழர் பிரதிநிகள் செயற்பட வேண்டும். ஒரு புதிய ஜனாதிபதியோ பிரதமரோ தெரிவு செய்யப்பட்டாலும் இந்நாட்டின் இனங்களுக்கிடையிலான நிரந்தர அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிட்டப்போவதில்லை.

அதுஅவ்வளவுஎளிதில்சாத்தியமாகக்கூடியதுமல்ல. எனவே தான் தமிழ்த் தேசியத்தின் வலிமிகுந்த எதிர்பார்ப்பை நீர்த்துப் போகச் செய்யும் அற்பத்தனமான செயல்களில் தமிழ் தரப்பு ஈடுபடுவதில் இருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.

போராட்டக்காரர்கள் முன்வைத்திருக்கும் ஆறு அம்சத் திட்டம் என்பது இந்நாட்டின் தேசிய அரசியல் நெருக்கடிக்கான தீர்வல்ல. அது முறையற்ற நிர்வாகத்தாலும் பிழையான முடிவுகளாலும் சுயநலமிக்க தீர்மானங்களாலும்விளைந்தபொருளாதாரநெருக்கடியால்விளைந்த தற்போதைய நடைமுறை வாழ்க்கைச் சிக்கலுக்கு ஒரு தீர்வைத் தேடுகின்ற ஒரு முயற்சி மாத்திரமேயாகும்.

இப்போதுள்ள மக்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகள் நிறைவேறும் போது தானாக மக்கள் தமது அடுத்த பணிகளைப் பார்க்கச் சென்றுவிடுவார்கள். அதற்கிடையில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் அரசியல் இலாபம் அடைய முனையும் குறுகிய புத்தி தமிழர் தேசியப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வுகளையும் பெற்றுத் தரப் போவதில்லை.

தனிப்பட்ட ரீதியில் அரசியல்வாதிகள் போராட்டக்களச் செயற்பாட்டாளர்களுக்கு தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவது வேறு, தமிழ்த் தேசியத்தின் பெயரால் ஆதரவு நல்குவது வேறு.

தமிழ்த் தேசியத்தின் நீண்ட கால அபிலாஷைகளை மலினமடையச் செய்யும் செயற்பாடுகளில் தமிழ்ப் பிரதிநிகள் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதை வன்மையாகக் கண்டிப்பதில் அர்த்தம் இருக்கின்றது.

எனவே இந்த விடயத்தில் மிகக் கவனமாகத் தமிழ்த் தேசியத் தரப்பு நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா சுட்டிக் காட்டியுள்ளார்.

# கோட்டாபய – ரணில் சதிகளுக்கு பெரமுன துணைபோகக் கூடாது!

## முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்து

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மக்களாணையை இழந்து விட்டது. மக்களால் கிடைக்கப்பெற்ற அதிகாரம் முற்றுப்பெற்றுவிட்டது.

பொதுஜன பெரமுன தரப்பினர் சுயமதிப்பீடு செய்து அவர்கள் திருத்திக்கொள்ளுவதற்காக முன் வருபவர்களாக இருந்தால் கோட்டா – ரணில் சதிகளுக்கு துணைபோகக் கூடாது என்று முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரதம செயலாளர் குமார் குணரத்தினம் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெற்று கொண்ட மக்கள் ஆணை இரத்து செய்யப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவுக்குக் கிடைக்கப்பெற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரமும் முடிந்துள்ளது.

பொதுஜன பெரமுன சுயமதிப்பீடு செய்து அவர்கள் திருத்திக்கொள்ளுவதற்கு முன் வருபவர்கள் இருந்தால் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் சதிகளுக்குத் துணை போக முடியாது.

கடந்த இரண்டரை வருடங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்புகள் மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் நீங்கள். சுயமதிப்பீடு செய்து போராட்டத்துக்கு இடையூறு விளைவிக்காது இணக்கமான சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு முன் வர வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ அல்லது பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் சதிகளில் சிக்காமல் இருக்க வேண்டும்.

அரசமைப்புகளில் உள்ள சரத்துக்குள் மறைந்து கொண்டு நாட்டில் சர்வாதிகாரப் போக்கை உருவாக்குவதற்கு முயற்சிக்கும் ரணில் விக்கிரமசிங்க உட்பட கோட்டாபய ராஜபக்ஷ சதிகளை தோற்படிப்பதற்கும் நாடாளுமன்றத்திலும் அனைத்து இடங்களி



லும் நாம் ஒன்றிணைவோம்.

போராட்டத்தால் அல்லது போராட்டக்காரர்களால் நாடு நெருக்கடிக்குள் தள்ளப்படவில்லை. கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் தீர்மானங்களே நெருக்கடிக்குப் பிரதான காரணம்.

பெரும்பான்மை மக்களின் விருப்பத்தாலும், ஆதரவாலும் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

நாட்டு மக்களுக்கும், சர்வதேசத்துக்கும் நம்பிக்கையான, ஸ்திரமான அரசாங்கத்தை வெளிப்படுத்த நாட்டில் புதிய சர்வகட்சி அரசாங்கம் ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இதற்கமைய நாட்டின் நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான எதிர்க்கட்சி உட்பட மற்ற ஏனைய கட்சிகளும் இணைந்து நாட்டின் ஏனைய தரப்பினருடன் ஒன்றிணைந்து மக்கள் எழுச்சிப் போராட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும்.

மேலும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் விடுக்கும் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு அதனை நிறைவேற்ற கூடாக முன்வர வேண்டும். – என்றார்.

# உலகில் அதிகளவுக்கு கண்காணிக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ பயணித்த விமானம்!

மாலைதீவில் இருந்து வியாழக் கிழமை இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஏற்றிச் சென்ற சவுதி அரேபிய விமானம் உலகில் அதிகமாகக் கண்காணிக்கப்பட்ட விமானம் எனவும் இது இலங்கையில் ஏற்பட்டுள்ள குழப்பமான அரசியல் விவகாரங்கள் தொடர்பில் உலகளவிலான ஆர்வத்தைக் கோடிட்டு காட்டியுள்ளது எனவும் புளும் பேர்க் என்ற சர்வதேச ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.


இணையத்தள தரவுகளின்படி சவுதி அரேபியாவில் விமானம் மாலைதீவு தலைநகர் மாலேவில் இருந்து ஜி.எம்.டி. நேரப்படி வியாழன் காலை 7.43 அளவில் புறப்பட்டுள்ளது.

புறப்பட்டதில் இருந்து 5 ஆயிரம் இணைய பயனர்களால் விமானம் கண்காணிக்கப்பட்டுள்ளது.

இது ஐரோப்பா வானில் பறக்கும் பிரான்ஸ் விமானப்படைக்குச் சொந்தமான விமானத்தை கண்காணிக்கும் நபர்களை விட மூன்று மடங்கு அதிகம்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஏற்றிச் செல்லும் சவுதி விமானம் சிங்கப்பூருக்கு சென்று அங்கிருந்து சவுதி திரும்பிச் செல்ல உள்ளதாகவும் பெயரை வெளியிட விரும்பாத மாலைதீவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத போராட்டம் மற்றும் பாசிசத்துக்கு எதிராகப் போராடுவாராம் ரணில் விக்கிரமசிங்க!




சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மற்றும் பாசிச செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடவுள்ளேன் எனப் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கை வரலாற்றில் நிகழ்ந்த மிக அமைதியான போராட்டத்தை பாசிச வாதிகள் ஆட்சிமாற்றத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ள நான் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராடும் நாட்டை, அழிப்பதற்காக அவர்கள் சதித்திட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

கிளர்ச்சிகள் மற்றும் அரசமைப்புக்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் காரணமாக இந்த நாடு முகம் கொடுத்த இன்னல்களை நீங்களும் நானும் நன்றாக அறிந்துள்ளோம்.

அப்படியான ஒரு யுகம் மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே நீங்கள் போராடினீர்கள். அந்த வகையில் பாசிசத்துக்கு எதிரான போரில் நான் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

# இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாத வரையில் பொருளாதாரப் பிரச்சினைக்கும் தீர்வு இல்லை

## இந்து சமயப் பேரவைத் தலைவர் சக்திகிரீவன் தெரிவிப்பு

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணாத வரை பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைத் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்திருகின்றார். தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நீண்டநெடுநாள்களாகக் காணப்படும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாததால் ஏற்பட்டதே என்பதை தென் னிலங்கை அரசியல் தலைவர்களும் சிங்கள மக்களும் உணர்வு பூர்வமாக அறிந்து கொள்ளவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு முறையான தீர்வினை வைக்காத ஆட்சியாளர்களால் வந்த விளைவே இது. இவர்கள் போரை நம்பி நாட்டை நாசமாக்கி விட்டார்கள். இதனால் இன்று மக்கள் பட்டினியின் விளிம்பிற்கு வந்துள்ளார்கள். மூன்று வேளை உண்ண உணவு கிடையாது, சமைப்பதற்கு எரிவாயு

கிடையாது, பயணிக்க எரிபொருள் கிடையாது. இதனால் சிங்கள மக்கள் மாபெரும் போராட்டங்களை நடத்தி ஆட்சியாளர்களை விரட்டுகிறார்கள்.

இது, வரவேற்கக் கூடியதாக இருப்பினும் இன்று நாடு இந்த நிலைக்கு வந்தமைக்குக் காரணம் இனப்பிரச்சினைக்கு நியாயத் தீர்வு காணாது, உரிமைகளுக்காகப் போராடிய தமிழ் மக்களுக்கு

எதிராகப் போரை நடத்தியமையே என்பதைச் சிங்கள மக்கள் சரியாக உணரவில்லை. இவர்கள் இதனை உணர்ந்திருந்தால் இந்தப் போராட்டத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதை முன்னிலைப் படுத்தியிருப்பார்கள். பொருளாதாரப் பிரச்சினைக்கான மூலமே இனப்பிரச்சனைதான். இதை உணரும் வரை இந்நாட்டில் உண்மையானஅமைதியோ உறுதியான அரசோ ஒருபோதும் சாத்தியமாகாது. ஆகையால் பௌத்த பீடங்களும் சிங்கள மக்களும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கவேண்டும் என்று அரசுக்கெதிராகப் போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். இல்லையேல் இந்



நாட்டு மக்கள் துன்பத்தில் மூழ்கியபடியே இருப்பார்கள்.

அமையப் போகும் புதிய அரசு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை மீது அனுதாபம் கொண்ட நாடுகளும் - குறிப்பாக ஐ. நா. சபையும் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமென்று கோருகின்றோம். - என்று உள்ளது.

# இலங்கை - இந்தியா இடை நடுவே கடல் மண் திட்டில் சிக்கிய 17 பேர்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 16

மன்னாரில் இருந்து தமிழ்நாட்டிற்குத் தப்பிச் சென்ற 17 பேரை இரண்டு நாடுகளுக்கும் இடையில் இலங்கையின் ஆளுகையில் உள்ள தீடையில்(மண் திட்டில்) இறக்கி விட்டுப் படகுகள் திரும்பியமையால் 17 பேரும் பல மணி நேரம் தீடையில் தவித்தனர். அவர்களை இந்தியத் தரப்பினரும் மீட்க முடியாத நிலை அதனால் ஏற்பட்டது.

மன்னாரில் இருந்து தமிழ்நாடு நோக்கி 3 படகுகளில் பயணித்த 17 பேரை படகோட்டிகள் இலங்கை ஆளுகைப் பகுதியில் உள்ள தீடையில் இறக்கி விட்டு திரும்பியுள்ளனர். இதனால் மாலை 6 மணிக்கு இறக்கப்பட்ட 17 பேரும் நேற்று இரவு 11 மணிவரை தீடையில் தவித்துள்ளனர்.

இவ்வாறு தவித்தவர்களை இலங்கைக் கடற்படையினர் மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர் என அறிய வந்தது. நேற்று நள்ளிரவு வரை அவர்கள் மீட்கப்படவேயில்லை என்றே தெரிகின்றது.

## நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது

ஜனாதிபதி பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடம் குறித்து இன்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும் என முன்னர் தீர்மானித்தபடி 19ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு, 20ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும்,

- நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தி சபாநாயகர் தெரிவிப்பு,

அரசமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04வது சரத்துக்கு அமைய நாடாளுமன்றம் இன்றுமுற்பகல் 10.00 மணிக்குக் கூடவிருப்பதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார்.

1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04வது சரத்துக்கு அமைய ஜனாதிபதி பதவியில் வெற்றிடம் ஏற்பட்டு மூன்று நாள்களுக்குள் நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும்.

இதற்கமைய அந்தச் சட்டத்தின் 05 ஆவது சரத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவியில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடம் குறித்து செயலாளர் நாயகம் இன்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கவுள்ளார்.

# மதுரங்குளியில் ரயிலுடன் மோதுண்டு ஒருவர் மரணம்

புத்தளம் - கொழும்பு ரயில் வீதியின் மதுரங்குளி செம்பட்டைப் பகுதியில் நேற்று இரவு ரயிலுடன் ஒருவர் மோதுண்டு மரணமாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து நேற்றிரவு புத்தளம் நோக்கி சென்ற பயணிகள் ரயிலுடன் இவர் மோதுண்டு உயிரிழந்து இருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த நபர், நிக்கவெரட்டி ரஸ்நாயக்கபுர பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் எதற்காக மதுரங்குளி பகுதிக்கு வருகை தந்தார், எவ்வாறு ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்தார் என்பது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் நீதவான் விசாரணையின் பின்னர், பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குருந்தூர்மலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அகற்றி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைதீவு நீதிவான் நீதிமன்றம் அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அத்துடன் அந்தப் பகுதியில் ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தினர் தங்களுடைய வழிபாடுகளை மேற்கொள்வதற்கு எந்தவிதத்திலும் தடைவிதிக்கக் கூடாது எனவும், இந்த இடத்தில் அமைதிக் குலைவு ஏற்படாத வகையில் பொலிஸார் உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குருந்தூர்மலை தொடர்பான ஏ.ஆர். 673/18 என்ற குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் முல்லைதீவு நீதிமன்றில் நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

இதன்போது மனுதாரர்கள் சார்பில் ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுடன் இவர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ்.எஸ். தனஞ்சயன் மற்றும் சட்டத்தரணி கெங்காதரன் ஆகியோரும் முன்னிலையாகினர். எதிர்த்தரப்பில் பொலிஸார் முன்னிலையாகினர்.

# பாட்டும் நானே? .......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணத்திற்காய் ஒன்றைச் சொல்கிறேன். சில காலங்களுக்கு முன்பு, இன்றைய வானியல் விஞ்ஞானிகள் நெப்டியூன், புளூட்டோ எனும் இரண்டு சிறு கோள்களைக் கண்டுபிடித்து அவற்றைப் புதிய கிரகங்களாக அறிவித்தார்கள். அக் கருத்தை ஏற்று, திருக்கணித பஞ்சாங்கத்தைக் கொண்டு சாதகம் கணித்தோர் சிலர், அக் கிரகங்களைச் சாதகக் கணிப்பிலும் சேர்த்துக் கொள்ளத் தலைப்பட்டனர்.

சிலகாலங்களின் பின் அவை இரண்டையும் கிரகங்களாகக் கொள்ள முடியாது என்று வானியல் விஞ்ஞானிகள் ஒன்று கூடி அறிவித்து விட்டனர். விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை கருவிகள் மாற மாறக் காட்சிகள் மாறும். அதனால்த்தான் 'நாசா' போன்ற நிறுவனத்தின் முடிவுகளோடு நம் பஞ்சாங்கங்களின் முடிவுகள் ஒத்திருக்க வேண்டும் என்ற விடயத்தில் எனக்கு உடன்பாடில்லை.

அதுமட்டுமல்லாமல் நமது சோதிட அமைப்பில் நிழல் கிரகங்களாய்ச் சொல்லப்படுகிற, ராகு, கேது என்கின்ற கிரகங்களை 'நாசா' போன்ற நிறுவனங்கள் அங்கீகரிப்பதில்லை. திருக்கணிதப் பஞ்சாங்கங்களும் கூட, இக் கிரகங்களை ஏற்றுக் கொள்கின்றன. 'நாசா' வோடு ஒத்துப் போனால்த்தான் அறிவியலுக்குப் பொருந்தும் என்று கருதினால் இவ்விரு கிரகங்களையும் இவர்கள் ஏற்பது எப்படி என்ற கேள்வி வரும்.

இதைவிட இன்னொரு உண்மையும் இருக்கிறது. நமது மரபில் ரிஷிகளால் எழுதி வைக்கப்பட்ட ஏடுகளைக் கொண்டு, 'காண்டம் வாசித்தல்' என்ற முறைமை இருக்கிறது. அங்ஙனம் காண்டம் வாசிக்கச் செல்லும் போது அவர்கள் நம் பெருவிரல் அடையாளத்தைக் கொண்டு நமது சாதகத்தைக் கணித்துச் சொல்கிறார்கள். அங்ஙனம் அவர்கள் கணிக்கும் சாதகம், 'வாக்கிய' பஞ்சாங்கத்தின்படிதான் அமைந்திருக்கிறது.

விஞ்ஞானம் என்றால், ஏதோ மாறாத, நிச்சயிக்கப்பட்ட உண்மை என்கின்ற நம்மவரின் மயக்கத்தால், நம்மில் பலபேர் விஞ்ஞானத்தோடு பொருந்தினால்த் தான் எல்லாம் உண்மையாகும் என்று நம்புகிறார்கள். அதனால் நம்முடைய ஞானியர்களின் கருத்துக்களையும் விஞ்ஞானத்தின்படி நிரூபிக்கவேண்டும் என்று முற்படுகிறார்கள். இவ் எண்ணம் தவறானது. மேற்படி கருத்தைக் கற்றவர்கள் பலரும்கூட பின்பற்ற முனைந்ததுதான் வேடிக்கை. நம் நாட்டின் தொன்மை மிக்க ஆலயங்களான திருக்கேதீஸ்வரம், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் போன்ற முக்கியமான சில ஆலயங்கள் கூட இந்த மயக்கத்திற்கு ஆளாகி வாக்கிய பஞ்சாங்கத்தை நிராகரித்தது வருத்தத்திற்குரிய விடயமாம்.

இங்கு நான் வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பு முறையை ஆதரித்துத்தான் சொல்லியிருக்கிறேன். இன்றைய வாக்கிய பஞ்சாங்கக்காரரை ஆதரித்துச் சொல்லவில்லை என்பதையும் இவ்விடத்தில் வலியுறுத்த வேண்டியிருக்கிறது. பஞ்சாங்கம் கணிப்பது என்பது வேறு. அக் கணிப்பைக் கொண்டு விரத நிர்ணயம், சுபமுகூர்த்தம் முதலியவற்றைக் கணிப்பது வேறு. பின் சொன்னவற்றைக் கணிக்க சோதிட, ஆகம, புராண, இதிகாசம் போன்றவற்றில் ஆழ்ந்த அறிவு இருக்கவேண்டும். பஞ்சாங்கங்களைக் கணிப்போரில் பலருக்கும், அவற்றைப் பயன்படுத்தும் அந்தணர்களில் பலருக்கும் அவை பற்றிய அறிவு நாளுக்குநாள் குறைந்து கொண்டே போகிறது. அந்தக் கட்டுரையை எழுதிய 'கௌசிகர்', மேற் சொன்னோரில் விதிவிலக்காய் இவ் விடயங்களில் ஓரளவு ஆழங்கால்ப்பட்டிருக்கிறார் என்பதை, அவரது கட்டுரையில் கண்டு மகிழ்ந்தேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * சபாஷ்! சரியான போட்டி. வாரிதியார் தமிழ் அறிவை வைத்து விஞ்ஞானத்திற்குச் சவால் விடுகிறார்.**

## அரசமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஊடகவியலாளர் சந்திப்பில், அந்த அமைச்சின் ஊடகப் பேச்சாளர் அரிந்தம் பாஹி இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில், இலங்கை பற்றி ஊடகவியலாளர்கள் வினவிய போது அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

ஜனநாயக முறை மற்றும் விழுமியங்கள், அத்துடன் நிறுவப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அரசமைப்புக் கட்டமைப்பின் மூலம் இலங்கை மக்கள் முன்னேற்றத்திற்காக அவர்களின் அபிலாஷைகளை அடைய முயற்சிக்கும் போது அவர்களுடன் நாங்கள் தொடர்ந்து நிற்போம். - என்றார்.

இலங்கையின் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-64

### ஜே ஆரின் அரசமைப்பு

இந்த அரசமைப்பு பற்றி விவரமாக பேசத் தேவையில்லை. தற்போது நடைமுறையில் இருக்கும் அரசமைப்பு இது தான்.

தமிழ் மக்களுக்கு அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தி வந்தபடி குறைகள் உண்டு, தான் பதவிக்கு வந்தால் தனது



தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவாறு சர்வ கட்சி மாநாடுகளால் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகுப்பேன் என உறுதிகள் தந்தவர் ஜே.ஆர். அவை எல்லாவற்றையும் பின்னர் காற்றில் பறக்க விட்டு விட்டு, தன்னை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக்கி, தான் வெளிப்படுத்தும் தர்மிஷ்டத்தின் அடிப்படையில் தமிழ் மக்களை இணக்கத்திற்குக் கட்டாயப்படுத்தவும், அவற்றில் ஒடுக்குவதற்கும் வழி வகுத்தவர். தனது அதிகாரத்தாலும், தான் பாவித்த தந்திரங்களாலும் நாடாளுமன்றம் ஒரு பக்கப்பாட்டு பாடும் அமைப்பாக உருமாற்றியவர்.

1972 இல் கொல்வின் ஆர்.டி.சில்வா உருவாக்கிய அரசமைப்பில் தமிழ் மக்கள் குறித்தும் ஏனைய சிறுபான்மையோர் பற்றியும் அதுவரை காலமும் இயக்கப்பட்டு நடைமுறையில் இருந்த சட்டங்கள் யாவற்றையும் அதனது ஒரு பாகமாக இணைத்து இருந்தார். ஆனால், அவையெல்லாம் இந்தப் புதிய அரசமைப்பில் நீக்கப்பட்டன.

ஆணைப் பெண்ணாக்கும் அல்லது பெண்ணைஆணாக்கும்அதிகாரத்தைத் தவிர, நான் ஜனாதிபதியாக சகல அதிகாரங்களையும் கொண்டுள்ளேன் என சூளுரைத்தார் ஜே.ஆர்.

அவர் தேடிக்கொண்ட நிறைவேற்று அதிகாரங்களைக் குறைக்கவும் நீக்கவும்தான் ஆரம்பத்தில் 17ஆவது, 18 ஆவது, 19 ஆவது, 20 ஆவது திருத்தங்கள் என்றும், பின் இப்போது 21 ஆவது, 22 ஆவது திருத்தங்கள் என்றும் ஸ்ரீலங்கா அல்லற்படுகின்றது.

காலி முகத் திடல் போராளிகள், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டு மக்களால், மக்களுக்கான, மக்களுக்குப் பொறுப்பு கூற வேண்டிய புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் கொண்டுள்ளார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களது இறைமையை மீட்டுக் கொள்ள வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றி, அதற்கு ஆதரவாகத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றிருந்தாலும், மறுபுறத்தில் இந்த அரசமைப்பு ஆக்கத்தின் போது அவர்கள் சில பரிந்துரைகளை – கோரிக்கைகளை – முன்வைத்தனர். அவை அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. இந்த அரசமைப்பும் தமிழ் மக்களது பங்களிப்பில்லாமல், சிங்கள நாடாளுமன்ற பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டது.

குள்ளத்தனத்தால் அவர் பெற்றுக்கொண்ட நிறைவேற்று அதிகாரங்களால் எவ்வளவு தூரம் அவர் தனது தர்மிஷ்ட கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு தமிழ் மக்களை அல்லற்படுத்தலாம் என அறிந்தும், அன்றில் அவற்றைக் கணக்கெடுக்காமல் நடப்பது நடக்கட்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்பட்டது. மறுபுறத்தில் அவற்றுக்கு எதிரான மாற்று வழிகள் அவர்களிடம் இருக்கவில்லை.

இந்நிலைமை விடுதலைக் குழுக்களை உருவாக்கியது.

1987இன் இந்திய – இலங்கை ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலும், மாகாண சபைகள் இந்தியாவின் மாநில அரசுகளுக்கு இணையான அதிகாரங்களை



கொண்டிருக்கின்றன என விவாதிக்கப்பட்டாலும், அவை வெளிப்படையான சமஷ்டியாக இருக்கவில்லை என்ற நிலைப்பாடு தமிழர் விடுதலைக் கூட்டணியிடமும் இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக நடைமுறை அதிகாரங்களை ஜனாதிபதி தன் கையிலேயே வைத்திருந்து, தனது கைப்பொம்மையை ஆளுநராக நியமித்து, எது வித அதிகாரங்களும் மாகாண சபைக்கு யதார்த்தமாகப் போகவிடாது வழி கோலி இருந்தார். இவை எவை பற்றியும் கரிசனை கொள்ளாமல் விடுதலை புலிகள் தனி நாட்டுக்கான போரை முன்னெடுத்துச் சென்றனர்.

பொதுவெளியில் புத்திஜீவிகளிடமும் சமூக ஆர்வலர்களிடமும் சில சமயங்களில் வெளிப்படையான சமஷ்டிக் கட்டமைப்புடன் அதிகாரங்களும் யதார்த்தமாகக் கையளிக்கப்பட்டால் விடுதலைப் புலிகளையும் சமாதானமாகிப் போரைத் தொடர்ந்து நடத்தாமல் இடைவெளி அரசியல் நிலைப்பாட்டில் சில காலம் இயங்கிப் பார்க்கலாம் என்ற எண்ணங்கள் இருந்தன.

நண்பர் கந்தசாமியின் கூற்றுப்படி நடத்தப்பட்ட சில அரசியல் விளக்கக் கூட்டங்களிலும் விடுதலைப் புலிகள், கூட்டணி அங்கத்தினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தமிழ் மக்களுக்காக கேட்கப்படும் சமஷ்டியின் தன்மை என்ன, அதன் வரைவுகள் தெளிவாக்கப்பட்டுள்ளனவா, வேறு நாடுகளில் நடைமுறையில் இருக்கும் சமஷ்டி அமைப்புகளில் எது ஸ்ரீலங்காவுக்கு பொருத்தமாக இருக்கும் அல்லது தமிழ் மக்கள் தங்களது எண்ணங்களில் ஸ்ரீலங்காவுக்கும் அவர்களுக்கும் பொருத்தமானது எது என்பன கேள்விகளாகக் கேட்கப்படுமாம். ஆனால் தரப்பட்ட மறுமொழிகளிலோ விளக்கங்களிலோ அதற்கான பதில் இருப்பதில்லையாம்.

நண்பர் கந்தசாமி தனது நேரடி அனுபவத்தில் விடுதலைப்புலிகள் தாங்கள் தனி நாட்டுக்கான இலட்சியத்திற்காகப் போராடுவதால் சமஷ்டியை நிராகரிக்கிறோம், அதனால் அது எந்த வடிவி லும், எப்படியான அதிகாரத்தில் வந்தா லும் அதில் அக்கறை கொள்ளப் போவ தில்லை என்ற கொள்கையையே பிரதிபலித்தனர் என்றார். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், நவரத்தினம், சம்பந்தன் போன்ற கூட்டணித் தலைவர்களிடமும் விசாரித்த போதும் அவர்கள் கூட சமஷ்டி என்ற அட்சரத்தை தவறாமல் சொன்னார்களே ஒழிய, எந்த வடிவமைப்பான சமஷ்டியை கேட்கிறோம் என்பதை உறுதிப்படக் கூறக் கூடியவர்களாக இல்லை என்ற ஏமாற்றமும் கோபமும் சீற்றமும் நண்பர் கந்தசாமியின் தொனிகளில் தெரிந்தன.

எப்படி தனித் தமிழீழம் (தனிநாடு) என்றில்லாமல் ஸ்ரீலங்காவில் இயங்கும் தமிழ் பரப்புகள் தமிழ் தேசியத்துக்கு வடிவங்களும் வர்ணங்களும் தருவது போன்ற நிலைதான் சமஷ்டிக்கும் இருந்தது. நகைச்சுவையாக நவரத்தினம் கூறுவாராம் "அவர்கள் சமஷ்டி தருகிறோம் என்று கூட சொல்லவில்லை. அதற்கு இடையில் ஏன் இந்தச் சில்லடுப்புகள்? அது வருகிறது என்றால் அப்பொழுது வடிவத்தைப் பற்றிப் பார்ப்போம்" – என்று. இப்படியான ஏனோதானோ என்று அசமந்த போக்குகளால் சில கூட்டங்களின் பின் நீதி மற்றும் சமத்துவதற்கான இயக்கம் (னிஹுயூமூசி) ஸ்ரீலங்காவிற்கு ஏற்புடைத்தான சமஷ்டி அடிப்படையில் ஆக்கப்படக்கூடிய குடியரசு யாப்பு ஒன்றை வடிவமைக்க சில புத்திஜீவிகளைக் குழுவாக நியமித்து அதில் காரியதரிசியான நண்பர் கந்தசாமியும் தலைவர் வன பிதா போல் கஸ்பேர்ஸ் பங்கு பற்றி உதவிகள் தந்தனராம்.



1990ல் இந்தக் குழுவில் கலாநிதிகள் பஸ்தியாம்பிள்ளை, றோஹான் எதிரிசிங்க, செல்வகுமார் இணைந்திருந்தனர். அவர்கள் தாங்கள் செய்த ஆய்வுகளில் இருந்தும் நேர்காணல்களில் கிடைத்த தரவுகளில் இருந்தும் அமைப்பு வடிவொன்றை உருவாக்கி, அதனை அங்கு இயங்கிய தூதரகங்கள், நாடாளுமன்ற அங்கத்தினர்கள், அரசு சார்பற்ற நிதியங்களுக்கும் பரவலாக விநியோகம்செய்தனர். பின்னர்நோர்வேஜிய அரசு தந்த நிதி உதவியில் இந்த அரசமைப்பு வடிவத்தை விளக்கு வதற்காக நாடளாவிய ரீதியில் 200 விளக்கக் கூட்டங்கள் வைக்கப்பட்டன. சம்பந்தனோ வேறு எந்தத் தமிழ் உறுப்பினர்களோ கலந்து கொள்ளவில்லை. கடைசியாக சமஷ்டி வடிவில் ஓர் அரசமைப்பு வடிவத்தைஅரசசார்பற்ற நிறுவனம்தான் தமிழ் மக்களுக்காக உருவாக்க வேண்டி இருந்தது. அதன் பிரதியைத்தன்னும் சுமந்திரன் பார்த்திருப்பாரா என்பது நண்பர் கந்தசாமியின் கோபம். ஏனெனில் இவற்றின் வரலாறுகளை அறியாது கூட்டணியினர் போலவே சிங்களப் பெரும்பான்மையிடமிருந்து அவர்களது இணக்கத்தில் ஒரு யாப்பை சமஷ்டி முறையில் பெற்று விடலாம் என்பது அபத்தம். மேலும் அது கானல் நீருக்கு மந்தைகளை ஓட்டிச் செல்லும் செயல் என்பது அவரது ஆதங்கம். சந்திரிகாவின் அரசமைப்பு பற்றி அவர் கூறியவை முக்கியமானவையும் அவரது அதிருப்திக்கு அடிமட்டமாகவும் இருந்தது. அவற்றை மேற்கொண்டு பார்ப்போம்.

(வளரும்)

